Registered as a news paper.

பக்கங்கள்: எட்டு

விலை ரூபா 10.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 21 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 05 (04.05.2006) வியாழக்கிழமை இதழ் 216

விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட
மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு
20% விசேட சலுகை
லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ..ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253
முருகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993

# இன்று பூரண ஹர்த்தால்!

யாழ்ப்பாணம்

உதயன் பத்திரிகை நிறுவனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து இன்று யாழ்.குடாநாட்டில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைக் காலமாக இராணுவத்தினராலும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களாலும் தொடர்ச்சியாக அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுவருகின்றனர்.

இதன் உச்சக்கட்டமாக உதயன் பத்திரிகை நிறுவனத்துக்குள் அத்துமீறி நுழைந்த ஒட்டுக்குழுவினர் மிகவும் கோரத்தனமாக மேற்கொண்ட படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து இன்று பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

எமது இனத்தின் மீதான படுகொலைகளை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தும் முகமாகவும், இந்தப் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒட்டுக்குழுவினரை உடனடியாகக் கைதுசெய்து சட்டத்தின்முன்

(08 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை அரசுக்கு எதிராக

## ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற ஈழ ஆதரவாளர்கள் கைது!

சென்னை

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் மீது சிங்களப் படைகள் நடத்திய தாக்குதலைக் கண்டித்து சென்னையில் நேற்று தடையை மீறி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற 500 இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர்.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையொட்டி சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் 500 இற்கும் மேற்பட்ட தமிழின உணர்வாளர்கள்

(08 ஆம் பக்கம் பார்க்க)



## கண்காணிப்புக்குழு அறிக்கை: விடுதலைப் புலிகள் கவலை!

கிளிநொச்சி

நீதிக்குப் புறம்பான பல கொலைகள் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மாறுபட்ட விளக்க அறிக்கைகளை வெளியிட்டிருப்பது குறித்து விடுதலைப்புலிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுக்கு விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மே 2 ஆம் திகதி இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் வெளியிடப்பட்ட தெளிவுபடுத்தல் தொடர்பில் நீங்கள் முன்னர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் எட்டப்பட்ட பின்வரும் நிலைப்பாட்டிலேயே தாங்கள் உள்ளீர்கள்.

எனவே, நாம் தற்போதும் அனுமானிக்கிறோம் வடக்கு - கிழக்கில் பொதுமக்கள் நீதிக்குப் புறம்பானமுறையில் கொல்லப்படுவதில் அரசாங்கப் பாதுகாப்புப் படைகளும் சம்பந்தப்பட்டிருக்கின்றன என நாம் அஞ்சுகின்றோம்.

இந்தத் தீர்ப்பானது களத்தில் நாம் மேற்கொண்ட அவதானிப்புக்களையும், எமது விசாரணைகளையும் அடிப்படையாகக் கொண்டே வெளியிடப்படுகிறது. மேலும் இந்தத் தெளிவுபடுத்தலானது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தீர்ப்பின் பொதுவான விதியை மட்டுமே குறிப்பிடுகிறது எனவும் நாம் அனுமானிக்கின்றோம்.

எனினும், மேலும் அரசாங்கத்தால்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் மீதான தாக்குதலுக்கு குவிந்துவரும் கண்டனங்கள்!

உதயன் மீதான தாக்குதல்;

## சந்தேக நபர்கள் ஆறுபேரும் நீதிமன்றத்தால் விடுவிப்பு!

யாழ்ப்பாணம்

உதயன் பத்திரிகை அலுவலகத்தினுள் நுழைந்த ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலை யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

யாழ். குடாநாட்டில் இயங்கும் மாணவர் அமைப்புக்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு உதயன் பத்திரிகை அலுவலகத்தினுள் - இராணுவப் பாதுகாப்புப் பிரதேசத்தில் நடத்தப்பட்டிருக்கும் இந்தத் தாக்குதல் ஊடக சுதந்திரத்துக்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள சவால் என்றே கருத வேண்டியுள்ளது.

குடாநாட்டில் இடம்பெற்றுவரும் இராணுவ கெடுபிடிகள், படுகொலைகள், மக்கள் மீதான துன்புறுத்தல்கள் தொடர்பான உண்மை நிலைகளை மூடி மறைப்பதற்காகவே ஊடகங்கள் மீதான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தினரும், துணை ஆயுதக் குழுவினரும் கடந்த காலங்களில் பத்திரிகை நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், படுகொலைகள் குறித்து அரசாங்கம் மௌனம் சாதித்து வருவதனாலே இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்து வருகின்றது.

சர்வதேச சமூகமும், சர்வதேச ஊடக அமைப்புக்களும் தலையிட்டு ஊடகவியலாளர்கள் மீதான பாதுகாப்பு மற்றும் தாக்குதல்கள், கொலை

(08 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்


உதயன் பத்திரிகை நிறுவனம் இனம்தெரியாத ஆயுததாரிகளால் தாக்கப்பட்டதன் பின்னர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஆறு நபர்களையும் யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் பிணையில் செல்ல அனுமதித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு உதயன் பத்திரிகை நிறுவனத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தையடுத்து அந்தப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் சந்தேகத்தின் பேரில் நான்கு மாணவர்கள் மற்றும் இரண்டு வர்த்தகர்களைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை ஜோசப் பாடசாலையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை - வசிகரன் (வயது20) , ஏ.கிரிஷாந் (வயது20), மட்டக்களப்பு சென். நீக்கலஸ் கல்லூரியைச் சேர்ந்த

(08 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தளபதிகளின் பயணம்: நோர்வேயின் கரிசனை இதுவே!



## என்கிறார் பெளயர்

ஒஸ்லோ

புலிகளின் கிழக்கு தளபதிகளின் போக்குவரத்து ஏற்பாடு குறித்தே இப்போது பேசப்படுவதாகவும், நோர்வேயின் கவனம் அதனை நோக்கியே திரும்பியுள்ளதாகவும் இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் ஹன்சன் பெளயர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்- இலங்கையில் சிக்கலான நிலை தோன்றியுள்ள நிலையில் அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் ஜெனிவா பேச்சுக்கு அழைத்துச் சென்று பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவர நோர்வே அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

இரு தரப்பினரையும் ஜெனிவா மேசைக்கு கொண்டுவர விரைவில் இலங்கைக்குச் செல்லவுள்ளேன். தற்பொழுது கிழக்கு தளபதிகளின் போக்குவரத்து குறித்தே பேசப்படுகிறது. அதில் நோர்வேயின் கவனம் திரும்பியுள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# 3 இளைஞர்களின் சடலங்கள் வவுனியா–செட்டிகுளத்தில் மீட்பு!

வவுனியா

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட மூன்று இளைஞர்களின் சடலங்கள் நேற்று கண்டுபிடிக்கப்பட்டன.

செட்டிகுளம் பாதையோரம் மூன்று இளைஞர்களின் சடலங்கள் கிடப்பதாக அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் அளித்த தகவலின் பேரில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலங்களை மீட்டனர்.

மூன்று இளைஞர்களும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியாகியுள்ளனர். அவர்களின் கைகள் பின்புறம் கட்டப்பட்டுள்ள நிலையில் சுடப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட 3 சடலங்களில் ஒருவர் வவுனியா பம்பைக்குளத்தைச் சேர்ந்த ஆர்.நாகேஸ் (வயது 29) என் அடையாளம் காணப்பட்டுள்



ளது.

இதேவேளை, இந்த இளைஞர்களின் கைகள் மற்றும் வாய் துணியால் கட்டப்பட்டு கடுமையாக சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதன்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தலைவர் பிரபாகரன் யதார்த்தவாதி என்கிறார் கல்கட்

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் தலைவர் யதார்த்தவாதி என இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெனரல் ஏ.எஸ். கல்கட் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்திய அமைதிப் படை இருந்த காலத்தில் அதற்குப் பொறுப்பானவராகச் செயற்பட்ட கல்கட் - இலங்கைப் பிரச்சினை தொடர்பாக ஆங்கில இணையத் தளம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளதாவது -

இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வே அனுசரணையாளர்கள் சிறப்பாகச் செயற்படுகின்றனர். இரு தரப்பிலும் சில முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இலங்கை அமைதி முயற்சிகளில் இந்தியா பங்கேற்க வேண்டிய தேவை இல்லை. சர்வ தேச சமூகம் அங்கே ஒரு புதிய சக்தியை அறிமுகம் செய்துள்ளது.

1980 ஆம் ஆண்டுகளில் இந்திய அமைதிப்படை இலங்கைக்குச் சென்றதற்குப் பின்னர் சர்வதேச நிலைகளில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அரசியல் மற்றும் பொருண்மியத் துறைகளில் இந்தியா ஒரு முக்கிய சக்தியாக உருவெடுத்துள்ளது.

இதர முக்கிய சக்திகளான அமெரிக்கா போன்றவை சர்வதேச நிலையில் இந்தியாவின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்றன. சர்வதேச அரசியல் நிலைத்தன்மைக்கு இந்தியா பங்களிக்க வேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

எனவே, சர்வதேச விவகாரங்களில் இதர சக்திகளின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய செயற்பட வேண்டிய மேலதிகப் பொறுப்பு இந்தியாவுக்குள்ளது.

பேச்சுக்களின் அடிப்படை அம்சங்களை இருதரப்பினரும் அங்கீகரித்துள்ளனர். இலங்கைத் தமிழர்களது சட்டபூர்வ உரிமைகளையும், இலங்கையின் இறையாண்மை மற்றும் பிரதேச ஒற்றுமையையும் 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் உறுதி செய்திருந்தது.

தற்போது எது செய்தாலும் இந்தச் சட்டபூர்வ உரிமை மற்றும் இறையாண்மை, பிரதேச ஒற்றுமை ஆகியவற்றைக் கொண்டே உருவாக்கப்பட வேண்டியதாயிருக்கும்.

சிங்களத் தலைவர்களைப் பொறுத்தவரையில் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். தேர்தலின் போது கடும்போக்கைக் கடைப்பிடித்த மகிந்த ராஜபக்ஷ - அமைதி முயற்சிகளினூடே தள்ளப்பட்டுள்ளார். அனைத்துக் கட்சிகளும் அமைதி முயற்சிகளில் ஒட்டு மொத்த ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றன.

புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு யதார்த்தவாதி. இலங்கைத் தமிழர் தரப்புப் பேச்சுக்குழுவினர் பிரபாகரனுடன்தான் ஆலோசனை நடத்துகிறார்கள். ஆனால், இதேபோன்று அரசாங்கப் பேச்சாளர்களும் செயற்பட வேண்டும் . அது ஒரு உத்தியாக இருக்கும்.

இலங்கையில் ஆயுத வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. இலங்கைத் தமிழர்களை இலங்கை அரசாங்கத்தால் யுத்தத்தில் வெல்ல முடியாது. அதேபோல இலங்கைக்கெதிராக வெற்றியைப் பெற்றுவிட முடியாது என்பதில் விடுதலைப்புலிகளும் அவதானமாக உள்ளனர். அங்கு அமைதி முயற்சிகளைத் தவிர வேறு வழியில்லை என கல்கத் தெரிவித்துள்ளார்.

# கடல்சார் வர்த்தக செயற்பாட்டில் பிரமாண்டமாக இயங்கும் புலிகள்

## இந்திய கடற்படை முன்னாள் அதிகாரி

கொழும்பு —

தமிழீழ விடுதலை புலிகள் கடல் சார் வர்த்தக நடவடிக்கையில் செயற்படுவதற்கான பிரமாண்ட கட்டமைப்புகளைக் கொண்டிருப்பதாக இந்தியக் கடற்படையின் முன்னாள் அதிகாரியும் ஆய்வு மையம் ஒன்றைச் சேர்ந்தவருமான விஜய் சகுஜா தெரிவித்துள்ளார்.

செயலூக்கம் உள்ள விடுதலைப் புலிகளின் கடல் வர்த்தக கட்டமைப்பு என்ற தலைப்பில் 14 பக்க ஆய்வு ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது -

இலங்கையின் வடக்கு - கிழக்கில் பெருமளவிலான பரப்பளவைத் தங்கள் கட்டுப்பாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் வைத்துள்ளனர். அத்துடன், மிகவும் வலிமை வாய்ந்த கடற்புலிகள் எனப்படுகிற கடற்படைப் பிரிவையும் வைத்துள்ளனர். கடற்படையினுள்ள தற்கொலைப் படையினருக்கு கடற்கரும்புலிகள் என்றும் பெயரிட்டுள்ளனர்.

உலகத்தின் எந்த ஒரு பாகத்திலிருந்தும் சட்டபூர்வமான பொருட்களைக் கொண்டு வருவதற்கான மிகப் பிரமாண்டமான கட்டமைப்பை விடுதலைப்புலிகள் கொண்டுள்ளனர்.

ஒரு சிறு தீவிலுள்ள நாட்டுக்குரிய அனைத்து கடற்படை வசதிகளையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படை பெற்றுள்ளது.

வர்த்தக கப்பல்கள், பெருந்தொகையிலான மீன்பிடிப்படகுகள், அதிவேக மோட்டார் சலுகுத்திகள் ஆகியவற்றை அவை கொண்டுள்ளன. இவற்றின் மாலுமிகளுக்கு தொழில் முறையிலான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஒன்று முதல் இரண்டு வரையிலான கப்பல் கொள்கலன்களைக் கொண்டு செல்லக்கூடிய கப்பல்களையும் விடுதலைப்புலிகள் வைத்துள்ளனர். மிக நவீனமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கடற்படையாக விடுதலைப்புலிகளின் கடற்படை உள்ளது.

இதில் நவீன தொழில்நுட்பங்களுக்கமைய உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிரியின் கப்பல்களை துறைமுகத்திலும், கடலிலும் தாக்க கூடிய வலிமையையும் அவர்கள் கொண்டுள்ளனர்.

1991 ஆம் ஆண்டிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் கடல் வழியாக வெடிதொலைவிலிருந்து ஆயுதங்களையும், வெடி பொருட்களையும் கொண்டு வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் கடல் சார் வர்த்தக நடவடிக்கைகளுக்கான கட்டளை, கட்டுப்பாடு மற்றும் தகவல் தொடர்பு அனைத்தும் கடற்புலிகளிடமிருந்து வேறு பிரிவினரிடம் உள்ளது.

ஆனாலும், வர்த்தக நடவடிக்கைகளுக்குக் கடற்புலிகள் உதவுகின்றனர்.


புலிகளின் கடற்கலங்கள் மரங்கள், சிமெந்து, சீனி, உப்பு, மா மற்றும் இரும்பு ஆகிய பொருட்களை ஏற்றிச் செல்கின்றன. தமிழீழ விடுதலைப்புலிகளின் கப்பல்கள் இது வரை போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் கீழ் சோதனையிடப்பட்டதாகவோ, தேடப்பட்டதாகவோ எதுவும் இல்லை.

விடுதலைப்புலிகளிடமுள்ள 12 முதல் 15 வரையிலான கப்பல்கள் ஆயிரம் முதல் ஆயிரத்து ஐநூறு தொன் வரையிலானவை.

இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளூடான கடல்சார் நடவடிக்கைகளையும் விடுதலைப் புலிகள் விரிவாக்குவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவும் தெரிகிறது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# ஐ.நாவின் அமைதிப் படையணி இலங்கைக்குத் தேவையில்லை

## என்கிறார் யசூசி அகாஷி



கொழும்பு —

இலங்கையில் மீண்டும் முழு அளவிலான யுத்தம் ஏற்படாத வரையில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை தேவையில்லை என்று ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய ஊடக நிறுவனம் ஒன்றுக்கு அகாஷி அளித்த நேர்காணலில் கூறியுள்ளதாவது -

ஒஸ்லோவில் கடந்த வாரம் இணைத் தலைமை நாடுகள் கூட்டம் நடைபெற்றது. இந்த மாத இறுதியில் ஜப்பானின் டோக்கியோவில் மீண்டும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரைமீறி, மீண்டும் முழு அளவிலான யுத்தம் இலங்கையில் ஏற்படாத வரையில் ஐக்கிய நாடுகள் சபையினது அமைதிப்படை தேவைப்படாது என்று கருதுகிறேன்.

கருணா குழு விவகாரம் அமைதி முயற்சிகளைச் சிக்கலாக்கியுள்ளது. இது தொடர்பில் முறைப்படியான வேண்டுகோளை அரசாங்கத்திடம் நோர்வே அனுசரணையாளர்கள் முன்வைத்துள்ளனர்.

இந்தக் குழுவினருக்கு அரசாங்கம் ஆதரவளிப்பது தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது விடயத்தில் அரசாங்கம் வெளிப்படையாகச் செயற்பட வேண்டும் என்று அரசாங்கத்துடனான பேச்சுக்களின் போது நாமும் வலியுறுத்தியுள்ளோம்.

அவுஸ்ரேலியாவில் இலங்கைத் தமிழர்கள்அதிகம் வாழும் நிலையில், அவுஸ்ரேலியாவின் பங்கும் முக்கியமானது.

இலங்கை அமைதி முயற்சிகளில் பங்கேற்றுள்ள தரப்பினருக்கு அவுஸ்ரேலியா ஆதரவளிக்க வேண்டும் என்பது குறித்து, அந்த நாடு சிந்திக்க வேண்டும்.

தென்னிலங்கையின் ஒருமித்த கருத்து உருவாக்கத்துக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடின முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

அமைதி முயற்சிகள் தொடர்பாக மகிந்த ராஜபக்ஷ சில உறுதியான முடிவுகளைத் தற்போது மேற்கொண்டிருக்கக் கூடும் என்று கருதுகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு நகரில் மேலும் ஆறு தற்கொலைதாரிகள்

கொழும்பு —

கொழும்பு நகரினுள் மேலும் ஆறு தற்கொலைதாரிகள் உள் நுழைந்துள்ளதாகப் இராணுவப் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

படை அதிகாரிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் மீது தாக்குதல் நடத்தவென வந்துள்ள இந்தக் குழுவினரிடையே பெண்களும் அடங்குவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இவர்களை கைது செய்யும் வகையில் கொழும்பு நகரில் சோதனைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

கொழும்பு நகர பாதுகாப்புக்காகப் புதிய பாதுகாப்புச் செயற்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கு கொழும்பு உயர் பொலிஸ் அதிகாரிகளும், ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், கொழும்பு நகரில் பயங்கரவாத செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானதெனவும், பயங்கர வாதிகள் குறித்த விபரங்கள் தெரிந் தால் உடனடியாக 155, 2433303 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். (தே)


சிறு விளம்பரம்

வீடு வாடகைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் பாடசாலைக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு தொ.பே.எண். 077 6179105 , 026 222 3441 (2260)

நிறைஞ்சனாஸ் சங்கானை

ஸ்ரீகாந்த் ,மீரா ஜஸ்மின் மற்றும் பலர் நடித்த

மெர்க்குரிப்பூக்கள்

கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு

அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த

மூன்றாவது வெற்றி வாரம்

திருப்பதி



காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

ராஜா யாழ்ப்பாணம்

புதுவருட வெளியீடு

பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த



அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

ப.நேரம் : 10.30,2.30,6.30,9.30


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

மீள் பரீட்சை (பழைய பாடத்திட்டம்)

முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள்

கல்வியாண்டு - 2004/2005

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் முதலாம், பகுதி - I, பகுதி - III வருட B.A.D/B.Com மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு மீள்பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவத்தை 02.05.2006 செய்வாய்க்கிழமை தொடக்கம் பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதில் தோற்றும் மீள்பரீட்சார்த்திகள் மீள் பரீட்சைக்கு ஒரு பாடத்துக்கு (பழைய பாடத்திட்டம்) ரூபா 50/= வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்திப் பற்றுச்சீட்டை விண்ணபத்துடன் இணைத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 10.05.2006 புதன்கிழமை அன்று அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

[C/5312] பதிவாளர்.

## கண்ணீர் அஞ்சலி



சதாசிவம் சின்னராசா

(இளைப்பாறிய மக்கள் வங்கி அதிகாரி, நுணாவில் குளம் கண்ணகை அம்மன் தேவஸ்தான பரிபாலனசபை ஆயுட்கால உறுப்பினர், நிர்வாகசபை அங்கத்தவர்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 | 25 |
| 06 | 04 |
| 1941 | 2006 |

அற்புதனே! சின்னராசா!
ஆற்றிய பணிகள் என்னே!
இப் புவியில் இனியுனைப்போல்
தோன்றுதற்கு யாருளரோ?

பரிபாலன சபையினர் நுணாவில் குளம் கண்ணகை அம்மன் தேவஸ்தானம் கைதடி, நுணாவில்.

[2259]

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியாகக் கடமையாற்றும் திருமதி.வீ. அமிர்தலிங்கம் அவர்களின் தந்தையார் திரு.பொன்னம்பலம் செல்லையா காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

யாழ்.போதனா வைத்தியசாலை,
தாதிய உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.

[2258]

# இலங்கையில் தமிழர் படுகொலையை நிறுத்த தமிழக கட்சிகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்

## கொளத்தூர் மணி வேண்டுகோள்

சென்னை—

இலங்கையில் கடந்த இரு மாதங்களில் 103 தமிழர்கள் படு கொலை செய்யப்பட்டும் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இடம்பெயர்ந்துள்ள அவல நிலைக்கும் முற்றுப்புள்ளி வைக்க இந்திய அரசு தலையிட தமிழக அரசியல் கட்சிகள் வலியுறுத்த வேண்டும் என்று பெரியார் திராவிடக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாகச் சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சிங்கள அரசுக்கும் - தமிழீழ விடுதலைபுலிகளுக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகி 4 ஆண்டுகள் கடந்த நிலையிலும், அந்த ஒப்பந்தப்படி 3 மாத கால அவகாசத்தில் நிறைவேற்றியிருக்க வேண்டிய துரோகக் குழுக்களின் ஆயுதக் களைவு -

வாழ்விடங்கள் மற்றும் வழிபாட்டு இடங்களிலிருந்து அரச படைகள் வெளியேறல் -

தமிழர் தாயகப் பகுதியில் கடலுக்குள் மீன்பிடித் தொழிலை தடையேதுமின்றி அனுமதித்தல் -

ஆகிய எதனையும் நிறைவேற்றாத சிங்கள அரசு, கருணா போன்ற புதிய துரோகக்குழுக்களை உருவாக்கிய நிலையில் - நடைபெற்ற ஜெனிவா பேச்சுவார்த்தையில் - மீண்டும் அதே கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டு,

பேச்சுவார்த்தைகள் ஏப்ரலுக்கு ஒத்திவைக்கப்பட்டு கடந்த பெப்ரவரி 24 இல் முடிவுக்கு வந்தது.

பெப்ரவரி 24 முதல் 27 வரை சிங்கள அரச படைகளாலும், அதன் துணையோடு இயங்கும் துரோகக் குழுக்களாலும், சிங்களக் காடையர்களாலும் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளால் 103 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் 18 வயதுக்கும் குறைந்த இளையோர் 6 பேரும் 4 வயது குழந்தை உட்பட 3 பேரும் 15 பெண்களும் அடங்குவர்.

ஜனநாயக வழியில் தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் கொடுத்த வந்த திருகோணமலைத் தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வவுனியா மாவட்டத் தலைவர் செந்தில்நாதன் உள்ளிட்ட தமிழர் தலைவர்களும் படுகொலைக்கு ஆளாகியுள்ளனர்.

திருகோணமலையில் ஏப்ரல் 12ஆம் திகதி சந்தைப்பகுதியில் ஒரு குண்டு வெடிக்க வைக்கப்பட்ட பின்னர் - 10 முதல் 15 நிமிடத்துக்குள்ளாகவே ஒரு லொறியில் 100 முதல் 150 சிங்களக் காடையர்கள் அந்தப் பகுதியில் இறக்கப்பட்டு, தமிழர்களது வர்த்தக நிலையங்கள், வீடுகள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டதுடன், 12 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் வெட்டியும் எரித்தும் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தப் படுகொலைச் சம்பவங்களின் போது சிங்கள அரச படைகள் சம்பவ இடத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாகப் பல்வேறு சர்வதேச மனித உரிமை அமைப்புகளும், ஊடகங்களும் குற்றம் சாட்டியுள்ளன.

இந்த நிலையில் கொழும்பில் சிங்கள இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது அடையாளம் தெரியாத நபர்களால் நிகழ்த்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலைக் காரணமாகக் காட்டி சிங்கள அரசின் முப்படைகளும் திருகோணமலைப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறிக்கொண்டு, தமிழர் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தின.

இதேவேளை - தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசங்களில் மட்டுமல்லாது ஆக்கிரமிப்பிலுள்ள தமிழ் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிலும் (வட்டம் என்ற கிராமம் மூதூர் கிழக்கிலுள்ளது) கூட சிங்கள இராணுவம் தாக்குதலை நடத்தியது.

இதில் மௌலவி உள்ளிட்ட 4 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது மட்டுப்படுத்தப்பட்ட ஒரு இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து நடத்துவோம் என்று இலங்கை அமைச்சர்களும் அரச சமாதான செயலகப் பொறுப்பாளர் பாலித கோகன்னவும் அறிவித்துள்ளது ஒரு மிகப் பெரிய யுத்த நிறுத்த ஒப்பந்த மீறலேயாகும்.

இந்த உண்மைகளுக்கு மாறாக தமிழ்நாட்டு ஊடகங்கள் சிங்களவர்கள் கொல்லப்படுவதாகவும்,

சிங்கள இராணுவத்தினரது குடும்பத்தினர் கதறி அழுகிற வண்ணப் படங்களை வெளியிடுவதும், ஊடக அறநெறிகளுக்கு எதிரானது.

இந்தப்போக்கை வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளையில், தமிழ் மக்கள் உண்மை நிலையை அறிந்து போர்நிறுத்த மீறலை நிகழ்த்தி வரும் சிங்கள அரசுக்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று இந்திய அரசை நாம் வலியுறுத்துகிறோம்.

தேர்தல் பரபரப்பிலுள்ள தமிழகக் கட்சிகளும், இலங்கையில் மீண்டும் தலை தூக்கியுள்ள தமிழினப் படுகொலையைக் கண்டித்து குரலெழுப்பவும் தமிழினப் படுகொலையைத் தடுக்கவும் இந்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம்.

இத்துடன், ஜெனிவா நகரில் சிங்கள அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை நிறைவடைந்த பெப்ரவரி 24 ஆம் திகதி முதல் ஏப்ரல் 27ஆம் திகதி வரை -

இலங்கைத் தீவில் தமிழர் தாயகத்திலும் சிங்கள ஆக்கிரமிப்புப் பகுதிகளிலும் சிங்கள இராணுவத்தினர் மற்றும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துரோகக் குழுக்கள் மற்றும் சிங்களக் காடையர்கள் நிகழ்த்திய படுகொலைகளின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் கொளத்தூர் மணி தெரிவித்துள்ளார்.

## புலிகளின் தற்காலிக தங்குமிடம் குருநாகல் எனத் தெரிவிப்பு

கொழும்பு—

குறுகிய காலப் பகுதிக்குள் குருநாகலில் இருந்து வட - கிழக்குப் பகுதிக்குச் செல்லக்கூடிய வகையில் புலிகள் தற்காலிகத் தங்குமிடமாக குருநாகலைத் தெரிவு செய்துள்ளமை குறித்து, புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளதாகக் குருநாகல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.டி.கே.அனில் பிரியந்த தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் நிலவுகின்ற பாதுகாப்பு நிலைமை தொடர்பாக நகரிலுள்ள ஹோட்டல் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தும் நோக்கில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் குறித்து கடும் எச்சரிக்கையுடன் இருக்குமாறும், இதன்மூலம் பேரழிவுகளைத் தடுக்க முடியுமெனவும் நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு விடுதிகளில் சோதனைகள் நடத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## நீதிக்குப் புறம்பான படுகொலைகள் அரசுக்கு எதுவும் தெரியாதாம்

கொழும்பு—

நீதிக்குப் புறம்பான படுகொலைகள் குறித்து அரசாங்கம் மீது குற்றம் சாட்டி வெளியிடப்பட்ட அறிக்கை குறித்து இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விளக்கம் அளித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம்

### கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

செவ்வாய்க்கிழமை இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்ட விளக்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது -

அரச படைகள் மற்றும் பொலிஸார் மீதான தீர்ப்புகளைச் சொல்லுவது அல்லது பொதுமைப்படுத்துவது என்பது கண்காணிப்புக் குழுவின் நோக்கம் அல்ல.

தங்களுக்குத் தெரிந்தவரை இத்தகைய நீதிக்குப் புறம்பான படுகொலைகள் குறித்துத் தெரியவில்லை என்று அரசாங்கம் விளக்கம் அளித்துள்ளது. இத்தகைய பொறுப்புணர்வுடன் நீதிக்குப் புறம்பான படுகொலைகளை அரசாங்கம் தடுக்க வேண்டும் என்று கண்காணிப்புக்குழு நம்புகிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரது முன்னைய அறிக்கையை அடுத்து பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகன்ன ஆகியோர் கண்காணிப்புக்குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சனை நேரில் சந்தித்துத் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

இந்த நிலையில் கண்காணிப்புக்குழு விளக்க அறிக்கையை வெளியிட்டுள்ளது.

## வத்தளை தேடுதலில் 11 தமிழர்கள் கைது

கொழும்பு—

வத்தளையிலுள்ள ஹெந்தலைப் பகுதியில் 300 இற்கும் மேற்பட்ட படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரசேத்தின் அனைத்து வீடுகளிலும் கடந்த திங்கட்கிழமை பாரியளவிலான சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அண்மையில் வடக்கு - கிழக்கிலிருந்து அந்தப் பிரதேசத்துக்கு வந்திருந்த அனைவரும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அவர்களில் 11 பேர் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கிழக்கிலிருந்து மாத்தளைக்குச் செல்லும் புலிகளின் இரகசியப் பாதை கண்டுபிடிப்பு

### இரகசியப் பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு—

கிழக்கு மாகாணத்திலிருந்து மாத்தளைக்குச் செல்வதற்கான இரகசியப் பாதையை விடுதலைப் புலிகள் பயன்படுத்துவதைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளதாகக் கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

பதுளை, புல்லங்கிரிய, நெல்லிமலே, கபரகல, நிகல் லொய ஊடாக மாத்தளை றிவஸ்ரன்வரை இந்தப் பாதையுள்ளது. றிவஸ்ரன் மலையில் வானொலிக்கான அதியுயர் கருவி அமைக்கப்பட்டுள்ளதாகவும், புலிகளின் இரகசிய பயண வழி இதற்கு எச்சரிக்கையாகவுள்ளதாகவும் இரகசிய பொலிஸ்பிரிவு தெரிவித்துள்ளது.

நடந்து மாத்திரம் செல்லக்கூடிய இரகசிய பாதையைப் புலிகள் ஏதாவது குற்றச் செயலுக்காகப் பயன்படுத்துவதாகவும் பொலிஸ் மத்தியில் சந்தேகம் நிகவுகிறது. (தே)

## இராணுவ அதிகாரியின் மனைவி போன்றே தற்கொலையாளி உள்ளே சென்றாராம்!

### பொலிஸ் உயர் அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு—

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவை இலக்கு வைத்துப் பெண் தற்கொலையாளி, இராணுவ அதிகாரியின் மனைவி போலவே இராணுவ தலைமையகத்துக்குள் சென்றிருக்கலாமெனச் சந்தேகிப்பதாகப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிலசமயம் தற்கொலையாளி கூறிய இராணுவ அதிகாரி தற்போது உயிருடன் இல்லாமல் இருக்கலாமெனவும், அதன் பின் குண்டுதாரி சிங்களப் பெயரில் இராணுவத் தலைமையகத்துக்குள் நுழைந்திருக்கலாமெனச் சந்தேகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்தேகத்தின் அடிப்படையில் விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. குறித்த பெண் கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் நடமாடித் திரிந்ததாகவும் இரகசியப் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். அவர் தங்கியிருந்த பல இடங்களில் பொலிஸாரின் கவனம் திரும்பியுள்ளது.

குண்டு வெடித்த தினமன்று இராணுவ தலைமையகத்துக்குள் உள்நுழைந்த எட்டு சந்தேக நபர்கள் குறித்த விபரங்கள் இரகசிய பொலிஸாருக்கு கிடைத்துள்ளதுடன், அவர்களது தேசிய அடையாள அட்டைகள் குறித்த விபரமும் கிடைத்துள்ளன.

இதற்கமைய இந்த எட்டுச் சந்தேக நபர்கள் குறித்த விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தலைமையகத்துக்குப் புதியவர்கள் செல்லவேண்டுமாயின், அவர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் சான்றை இராணுவத் தலைமையக பிரதான வாயிலில் வழங்க வேண்டும். அந்த விபரங்கள் அங்குள்ள குறிப்புப் புத்தகத்தில் குறித்து அனுமதிப்பத்திரம் வழாங்கப்படும்.

ஆனால், இராணுவ உயர்அதிகாரிகளின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது மிக நெருக்கமானவர்கள் தொடர்பாக அதற்கு மாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது இரகசிய பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

அந்தச் செயற்பாட்டுக்கமைய எந்தவித அனுமதிப்பத்திரங்களுமின்றி, அடையாளத்தை உறுதிப்படுத்தும் குறிப்புகளும் பிரதான வாயிலில் குறிப்பிடப்படாமலேயே சில நபர்களுக்கு இராணுவத் தலைமையகத் துக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டமை குறித்தும் தெரியவந்துள்ளது.

தற்கொலைக் குண்டுதாரியிடமும் உட்செல்லும் அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை. விசாரணைகள் மூலம் பல சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்களில் பெண்களும் அடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

## கொழும்பு மாநகர தேர்தல் ஐ.தே.கட்சி இன்று முடிவு!

கொழும்பு—

கொழும்புமாநகரசபைத்தேர்தலில் சுயேட்சைக் குழுவினூடாகப் போட்டியிடுவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி இன்று முடிவு செய்யவுள்ளது.

கொழும்புத் தேர்தலில் ஐ.தே.கவின் வேட்புமனு நிராகரிப்புத் தொடர்பான மேன்முறையீட்டு வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் தேர்தல் ஆணைக்குழு முடிவு எடுக்கவுள்ளது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வரவுள்ளது.

ஐ.தே.கவின் சார்பில் பிரதி மேயர் அசாத் சாலி சுயேட்சையாக நிறுத்தப் படக்கூடும் என்று கூறப்பட்டாலும், இது தொடர்பாக தான் எதுவும் முடிவெடுக்கவில்லை என்று அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

## செங்கலடி தேடுதலில் 16 சந்தேக நபர்கள் கைது

மட்டக்களப்பு—

செங்கலடி பொதுச் சந்தைப் பகுதியில் கடந்த திட்கட்கிழமை நடத்தப்பட்ட பாரிய தேடுதல் நடவடிக்கையில் 12 பேரை ஏறாவூர் பொலிஸார் கைது செய்தனர்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி நகைக் கடை ஒன்றில் நகை கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டதையடுத்து இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னாமுனை, மயிலம்பாவெளி, ஆறுமுகத்தான்குடியிருப்பு, ஏறாவூர், செங்கலடி, வந்தாறுமூலை, தளவாய், கொம்மாந்துறை, மாவடிவேம்பு மற்றும் சந்திவெளி ஆகிய பகுதிகளில் கடந்த 4 மாதங்களில் 30 இற்கும் மேற்பட்ட கொள்ளைச் சம்பவங்கள் நடந்துள்ளன.

கைது செய்யப்பட் 16 பேரில் 4 பேர் மேலதிக விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது கிராம அதிகாரிகளுடனான ஆலோசனைக்குப் பின்னர் விடுவிக்கப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜனாதிபதியின் பயணத்துக்கு கட்டுப்பாடு

கொழும்பு—

புலனாய்வுப் பிரிவின் அறிக்கையை கவனத்திற் கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் போக்குவரத்து மற்றும் கூட்டங்களைக் கூடிய வகையில் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

விடுதலைப்புலிகளின் முக்கிய இலக்காக ஜனாதிபதி உள்ளதனால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது ஜனாதிபதி குடியிருக்கும் அலரி மாளிகையில் அவரது பாதுகாப்புத் தொடர்பான பொருத்தமான சூழல் இல்லையெனவும், எனவே இந்த மாத இறுதிக்குள் ஜனாதிபதி மாளிகைக்குள் அவரை அழைத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

# தமிழ் ஊடக நிறுவனங்களை அழிக்கும் செயற்பாடே உதயன் மீதான தாக்குதல்

## வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்

தமிழ் ஊடகவியலாளர்களைக் கொன்று குவிப்பதன்மூலம் தமிழ் மக்களது உரிமைக்குரலை மழுங்கடிக்கலாமென கனவுகண்டு ஏமாற்றமடைந்த சக்திகள் தற்போது மொத்த தமிழ் உடக நிறுவனங்களைத் தாக்கியழிப்பதன் மூலம் தமது இலக்கை அடையமுற்பட்டுள்ளனர்.

அந்த வகையிலேயே உதயன் அலுவலகம் மீதான தாக்குதலையும் நாம் நோக்க வேண்டியுள்ளதென உதயன் அலுவலகம் மீதான தாக்குதலைக் கண்டித்து வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கபபட்டுள்ளதாவது -

ஒட்டுமொத்த ஊடக சுதந்திரத்துக்கும் ஆப்பு வைப்பது போன்ற இரத்த வெறிபிடித்த இந்தத் தாக்குதலை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

துன்பத்திலும் நாம் அனைவரும் ஒன்று திரண்டு எமது தோள்களைக் கொடுக்கிறோம். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை இனங்காணுமாறு நாம் கோரப்போவதில்லை.

ஏனெனில், ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் தாக்குதலை நடத்தியவர்கள் யாரென்பது நன்கு தெரியும். வெளியே பூசிமெழுகும் விசாரணைகளில் நாம் நம்பிக்கையற்றுப் போயுள்ளோம்.

உயிரிழந்த உறவுகளுக்கு எமது அஞ்சலிகளைச் செலுத்திக்கொள்வதுடன், ஊடக சுதந்திரத்துக்காக மீண்டும் மீண்டும் ஓங்கி அனைவரும் குரல் கொடுப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெற்றோலை எந்தவிதமான தட்டுப்பாடுமின்றி பெறலாம்

## பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமையாளர்

யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் கட்டுப்பாடில்லாமல் பெற்றோலைப் பெற்றுக்கொள்ள முடியுமென யாழ். மாவட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் வழங்கப்பட்டு வந்தமையால் ஓரளவு அனைவரும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

எனினும் மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோலை நிரப்பிவிட்டு அவர்கள் அதனை மீண்டும் எடுத்து விட்டு திரும்பவும் பெற்றோலுக்காகக் காத்து நிற்கிறார்கள். இதனாலே பெற்றோல் தட்டுப்பாடு நிலவுகிறது.

எனினும் வழமையான முறையில் அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் பெற்றோலைப்பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## பாடசாலைக்குச் செல்லாத 5 மாணவர்கள் இணைப்பு

சாவகச்சேரி

தென்மராட்சி வலயக்கல்விப் பிரிவினரும், யுனிசெப் நிறுவனமும் இணைந்து நடத்தும் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களை மீளவும் பாடசாலைகளில் இணைக்கும் திட்டத்தின் கீழ் இரண்டு கற்றல் நிலையங்களிலிருந்து இதுவரை 5 மாணவர்கள் பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

வரணி வடக்கு நிலையத்திலிருந்து 4 மாணவரும், மட்டுவில் சந்திர மௌலீச நிலையத்தில் இருந்து 1 மாணவனுக்குமே பாட சாலையில் இணைக்கப்பட்டுள்ளதாக உதவிக்கல்விப் பணிப்பாளர் தா.பாசுசுந்தரம் தெரிவித்தார். (29)

# கிராம அபிவிருத்தி பணிகளில் சங்கங்கள் ஈடுபடுவதில்லை

## அரச அதிகாரிகள் விசனம்

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் கிராம அபிவிருத்தி சங்கங்கள் தமது கிராமங்களின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து பிரதேசசபை மற்றும் பிரதேச செயலாளர்களின் ஒப்பந்த சேவைகளைப் பொறுப்பேற்று செய்வதிலேயே ஆர்வம் காட்டி வருவதாக அரச அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிராமிய மட்டத்தில் பொது மக்களை ஒன்று திரட்டி கிராமிய மட்ட அபிவிருத்திப் பணிகளைச் செய்ய வேண்டிய சங்கங்கள் இலாபத்தை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றன.

எனினும் இந்தசங்கங்கள் பொறுப்பேற்கும் ஒப்பந்த வேலைகள் குறித்த விபரங்களை கிராமிய அபிவிருத்திச் சங்கங்களில் இருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில்லை.

இந்த அபிவிருத்திச் சங்கங்களின் பெயர்களையும், பதிவுகளையும் பயன்படுத்தி ஒரு சிலரே ஒப்பந்த வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத போக்காலை வீதி

உடுப்பிட்டி

உடுப்பிட்டி போக்காலைவீதி முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக இருப்பதால் அந்த வீதியூடாகப் பயணம் செய்யும் பொது மக்களும் விவசாயிகளும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட உடுப்பிட்டி போக்காலை வீதி சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக திருத்தப்படவில்லை. இதனால் இந்த வீதியூடாக பயணம் செய்ய முடியாது சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வயல் விதைப்பு மற்றும் ஆறுவடை காலங்களில் இந்த வீதியூடாக விவசாய பொருட்களை கொண்டு செல்லும் வியாபாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த இந்த வீதியை திருத்தி இதுவரை போக்குவரத்துக்கு உதவுமாறு பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் வீதியை திருத்துவதற்கு கரவெட்டி பிரதேசசபை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அந்த பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# பதில் கடமை உத்தியோகத்தர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்களில் இரண்டு வருடங்களுக்கு மேலாகப் பதில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு அவர்களுக்குரிய போக்குவரத்து கொடுப்பனவோ பதில் கடமையாற்றுவதற்கான வேதனமோ வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் 13 கமநல சேவை நிலையங்கள் உள்ளன. ஆனால், 5 கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களே கடமையாற்றுகின்றனர். இவர்கள் ஐவரும் மேலதிகமாக பதில் கடமையாற்றுகின்றனர். ஒரு சிலர் மூன்று கமநல சேவை நிலையங்களுக்கு பொறுப்பாகவும் யாழ். மாவட்ட கமநல சேவை நிலைய உதவி ஆணையாளர் கே.சுந்தரேசனால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் கடமையாற்றும் இவர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாக எந்தவித கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

எனவே, தமக்கான பிரயாணப் படி மற்றும் வேதனத்தை வழங்குவதற்கு அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### ஆசிரியருக்கான கொடுப்பனவு

சாவகச்சேரி

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட சைவ சமய ஆசிரியர்களுக்கு கடந்த 11 அம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெற்ற செயலமர்வில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு நாளை மாலை 3 மணிக்கு டச்சு வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள வலயக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் புராணபடல ஒலி நாடாவும், கணிப்பீட்டுக் கருவி பிரதிகளும் வழங்கப்படவுள்ளதாகவும் வலயக் கல்வி அலுவலக சைவ சமய ஆசிரிய ஆலோசகர் இ.ராமலிங்கம் தெரிவித்துள்ளார். (29)

### கலந்துரையாடல்

தும்பளை

தும்பளை - 404 பிரிவுக்கான கிராம சேவையாளராக மாற்றலாகியிருக்கும் தி.சாருமதி கடந்த 30 ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் தும்பளை தெற்கு கிராம மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.அன்ரனியின் தலைமையில் நடைபெற்ற இந்த ஒன்று கூடலின்போது கிராமிய மக்கள் வீட்டுத் திட்டம் பற்றிய தேவைகளை முன்வைத்துள்ளனர்.

இது பற்றி பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு உதவுவதாகவும் மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமையில் மக்களைச் சந்திப்பதற்காக சனசமூக நிலையத்துக்கு வரவுள்ளதாகவும் கிராம சேவையாளர் தெரிவித்தார்.

இவர் பொலிகண்டியில் ஏற்கனவே கடமை புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஒழுங்கான சேமிப்பை மேற்கொண்ட சீ.க.கூ.சங்க அங்கத்தவர்கள் 4 பேருக்கும், தமிழொளி மாணவர் மன்ற மாணவர்கள் 7 பேருக்கும் புதிய கிராம சேவையாளரால் பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்பபட்டமை குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பாடசாலை பெறுபேறுகள் சில

யாழ்ப்பாணம்

அண்மையில் வெளியான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளில் மேலும் சில பாடசாலைகளின் வெறுபேறுகளின் விபரங்கள் வருமாறு -

செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை -

அ.மனோராஜ் 7 ஏ - 2 பி, நா.ஜீவிதா 5 ஏ - 3 சி - 1 எஸ், ஜெ.தர்சிகா 2 ஏ - 2 பி - 1சி 4 எஸ், பா.சிந்துஜா 3 பி - 2 சி - 4 எஸ்.

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி-

ஜெ.அகிலறூபி 8 ஏ - 2 பி, பா.தமயந்தி 7 ஏ - 2 பி - 1 சி, சி.சரோஜா 5 ஏ - 3 பி - 1 சி - 1 எஸ், சி.வைஷ்ணவி 5 ஏ - 3 பி - 1 சி - 1 எஸ், சே.அனுஷா 4 ஏ - 4 பி - 2 சி, அ. கீர்த்திகா 4 ஏ - 3 பி - 3 சி, ஜெ.ஜனனி 4 ஏ - 3 பி - 3 சி, அ.கோகுலரஞ்சனி 4 ஏ- 3 பி- 2 சி - 1 எஸ், செ.றமணா 4 ஏ - 1பி - 3 சி- 1 எஸ்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி-

கை.அனுஜா 9 ஏ- 1 பி, சி.கேசலா 8 ஏ - 1 பி - 1 சி, பா.அபிராமி 7 ஏ - 3 பி, சி.தர்மசாஸ்தன் 7 ஏ- 2 பி - 1 எஸ், பா.லோகதுர்காசினி 7 ஏ - 1 பி - 2 சி, சி.சகிலா 6 ஏ - 4 பி, ம.மகிலன் 6 ஏ- 2 பி - 2சி, ச.ராதிகா 6 ஏ- 2 பி - 2 சி, அ.ஜர்மிலா 5 ஏ- 3 பி - 2 சி, சு.றிசாந்தி 5 ஏ- 1 பி - 2 சி - 2 எஸ்.

# நீர் விநியோகக் குழாய்கள் உடைப்பதை நிறுத்த வேண்டும்

## நகரசபை செயலாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி

சாவகச்சேரி நகரசபையால் குடிநீர் விநியோகிக்கும் குடி நீர்க் குழாய்கள் சில விஷமிகளால் சேதப்படுத்தப்பட்டு வருவதால் நீர் விநியோகத்தை உரிய முறையில் செயற்படுத்த முடியாதிருப்பதாக நகரசபைச் செயலாளர் தெரிவித்தார்.

சாவகச்சேரிப் பகுதியில் 38 இடங்களில் குடிநீர் இல்லாத மக்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, 4 இடங்களில் தினமும் குழாய்களை சேதப்படுத்கிறார்கள். நீர் விநியோகத்துக்கு நிரந்தர ஊழியர் நியமிக்கப்படாத போதிலும் தற்காலிக ஊழியர் மூலம் தினமும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதால் மேலதிக செலவுகள் ஏற்படுகிறது.

விசமிகளின் இந்தச் செயற்பாட்டால் சீராக நீர் விநியோகிக்க முடியாதுள்ளது. அபிவிருத்திக்கு பாவிக்க வேண்டிய நிதி விஷமிகளின் செயலால் வீணாகப்போகிறது.

நீர்க்குழாய்களை உடைப்பதை நிறுத்தி - சமூக நன்மைக்காக பாவனையாளர்களும், பொதுமக்களும் உதவ வேண்டும் என நகர சபை செயலாளர் மேலும் தெரிவித்தார். (29)

## சித்திரபாடக் கருத்தரங்கு

கந்தர் மடம்

2008 க.பொ.த உயர்தரத்தில் சித்திரத்தை ஒரு பாடமாகத் தெரிவு செய்துள்ள மாணவர்களுக்கான இலவச சித்திர பாடக் கருத்தரங்கு - எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆத்திசூடி வீதி கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப் பயிற்சி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு இலவச பாடத்திட்டக் கைநூலும் வழங்கப்படவுள்ளது.



தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித சூசையப்பரின் திருவிழாவை முன்னிட்டு புனிதரின் திருச் சொரூபத்தை பவனியாக எடுத்து வருவதையும், வாலிபர் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டியில் ஆலய பங்குத் தந்தை கொடியேற்றுவதையும் படங்களில் காணலாம். (சில்லை தாஸ்)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந்து அற்று.
- திருக்குறள்

## நமது நோக்கு

# ஊடகக் கொலைகள்!

சர்வதேச ஊடக சுதந்திர தினத்துக்கு முதல் நாள் இரவு - உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் ஆயுதக் குழுவினர் நிகழ்த்தியிருக்கும் வெறியாட்டம் மிக மோசமான கொலைக் கலாசாரத்தை வெளிப் படுத்தியிருக்கிறது.

இலங்கையில் தமிழ் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது கடந்த பல ஆண்டு களாகவே இத்தகைய தாக்குதல்கள் இடம் பெற்று வந்திருக்கின்றன.

நிமலராஜன், டி.சிவராம், நடேசன், சுகிர்தராஜன் என்று ஊடகவியலாளர்களும் இன்னும் பல ஊடகத் துறையினரும் சுட்டுபடுகொலை செய்யப்பட்டிருந்த போதும் ஊடகத்துறை தமிழ் தேசியத்துக்கான தமது பங்களிப்பை நிறைவாகவே செய்து வந்தது.

ஆனால், தனி நபர்கள் மீதான தாக்குதல்கள், படுகொலைகள் மூலம் தமிழ் தேசியத்தை சிதைக் கவோ, தமிழர் தாயகத்தில் நிகழும் அராஜகங்களை வெளிவராது தடுக்கவோ முடியாது போன சக்திகள் - இப்படி பத்திரிகை நிறுவனத்துக்குள் புகுந்து வெறி யாட்டம் நிகழ்த்த ஆரம்பித்துள்ளன.

பத்திரிகை நிறுவனத்துக்குள் புகுந்து கொலை வெறியாட்டம் நடத்துவதன் மூலம் குறிப்பிட்ட பத்திரிகையை வெளிவராமல் தடுப்பது, மேலும் ஏனைய பத்திரிகைகள், ஊடகங்களின் வாயை மூடச்செய்வது போன்ற நோக்கங்களை இவர் கள் அடைய முயற்சித்திருக்கலாம்.

குடாநாட்டில் தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் படுகொலைகளின் ஒரு அங்கமாகவே - இந்தப் படுகொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. இந்தத் தாக்கு தலுக்குக் காரணமான சக்திகள் இனங்காணப்பட்டு தமிழ் மக்களின் முன் தோலுரிக்கப்படவேண்டும்.

அதேவேளை, இந்தக் கோரக்கொலை வெறியாட் டத்தை நிகழ்த்திய ஏழு பேர் கொண்ட கும்பல் எவ்வாறு உயர் பாதுகாப்பு மிக்க யாழ்.நகருக்குள் தன்னியக்க துப்பாக்கிகளுடன் நுழைந்தது என்ற கேள்வியும் எழுகிறது.

கடந்த சில நாட்களாக யாழ்.நகருக்குள்ளேயும், வெளியேயும் செல்லும் அனைவரையும் பால், வயது வேறுபாடின்றி படையினர் சோதனையிடும் நடை முறை மாலை வேளைகளில் இருந்துவருகிறது.

இப்படியிருக்கும் போது - ஏழுபேர் தன்னியக்கத் துப்பாக்கியுடன் சாவகாசமாக வந்து தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றிருக்கும் போது - படையினரின் சோதனையும், பாதுகாப்பும் எங்கே போயின?

மக்களுக்கான பாதுகாப்பு என்ற போர்வையில் நடத்தப்படும் சோதனைகள்(?) என்ன பயனைக் கொடுத்திருக்கிறது என்ற கேள்வி எழுகிறது.

நிச்சயமாக இந்தச் சம்பவத்தில் தொடர்புபட்ட வர்கள் படையினருக்குத் தெரியாமல் தப்பிச் சென்றி ருக்க வாய்ப்பில்லை என்றே பொதுவான கருத்து நிலவுகிறது.

தமிழ் மக்களின் மீதான அடக்குமுறைகளைக் கண்டித்ததற்காகவோ, அல்லது தமிழரின் உரிமைப் போராட்டத்துக்காக குரல் கொடுத்ததற்காகவோ ஊடகத்துறையின் மீதான தாக்குதல்கள் நிகழ்த்தப் பட்டிருக்கலாம்.

தமிழ் ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல் குறித்து உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகத்துறை அமைப்புக் கள் எத்தனை தடவைகள் குரல் எழுப்பியும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே மாறிவிட்டது.

அரச தரப்பினூடாக செய்யப்பட வேண்டிய எந்தப் பாதுகாப்புமே தமிழ் ஊடகவியலாளர்களுக்கு வழங் கப்படவில்லை. எத்தனையோ போராட்டங்களில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை 'இனி உங்களைத் தான் சுடுவோம்' என்று கூட படை யினர் எச்சரித்திருந்தனர்.

இந்த வன்மத்தின் வெளிப்பாடுதான் இதுவோ என்ற சந்தேகத்தையும் ஒதுக்கிவிட முடியாது.

ஏதோ உலக ஊடக சுதந்திரதினத்தை பிரமாண்ட மாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருப்பதாக வாய் கிழி யக் கத்தும் இலங்கை அரசு- ஊடக சுதந்திர தினத்தில் தமிழ் ஊடகத்துறைக்குக் கொடுத்த பரிசுதான் இது.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். தமிழ் ஊடகத் துறையை அடக்கி ஆண்டு விடலாம் என்றோ, இத்த கைய செயல்களூடாக உண்மைகள் உலகுக்கு அம்ப லமாவதை தடுத்து விடலாம் என்றோ நினைத்தால் அது ஒருபோதும் சாத்தியமாகாது. இதனை இத் தகைய 'கிணற்றுத் தவளைகள்' புரிந்து கொள்ள வேண்டும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

# உதயன் அலுவலகம் மீதான தாக்குதல் அரசே முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும்

## அரியநேந்திரன் எம்.பி தெரிவிப்பு

மட்டக்களப்பு —

உதயன் அலுவலகம் மீது நடத்தப் பட்ட தாக்குதலில் இரண்டு பணியாளர் கள் உயிரிழந்தும், மேலும் ஊழியர்கள் காயமடைந்த சம்பவத்துக்குமான முழுப் பொறுப்பையும், அரசாங்கமே ஏற்க வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அதியுயர் பாதுகாப்பு வலயமாக வுள்ள இடத்தில் அமைந்துள்ள உதயன் காரியாலயத்தினுள் அரசபடைகளின் நட மாட்டம் செறிந்து காணப்படும் இடத்தில் ஆயுததாரிகளின் இவ்வாறான காட்டுமி ராண்டித்தனமான தாக்குதலை நடத்தி இருப்பது கண்டிக்கத்தக்க செயலாகும்.

சர்வதேச ஊடகவியலாளர் தினம் அனுஷ்டிக்கப்படும் இந்தத் தினத்தில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கும், தமிழ் ஊடகங்களுக்கும் இந்த நாட்டில் பாது காப்பு இல்லை என்பது மீண்டும் சர்வதே சத்துக்கு இந்தச் சம்பவத்தால் உணர்த் தப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் நிமலராஜன் தொட க்கம் மாமனிதர் சிவராம் வரையும் கொலை செய்யப்பட்ட போதும் இந்தக் கொலையின் சூத்திரதாரிகள் கண்டறி யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்ற போதும், இதுவரை தண்டிக்கப்பட்டதாக வரலாறு இல்லை. கண்துடைப்புக்காக விசாரணை என்ற போர்வையில் கொலை யாளிகள் பாதுகாக்கப்பட்டு மூடி மறைக் கும் நிலையே தொடர்வதை காண முடிகின்றது.

இந்த நிலையில் தற்போது இடம் பெற்ற உதயன் பத்திரிகை அலுவலகம் மீதான தாக்குதலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாரபட்சமற்ற விசாரணை நடத்த உத்தரவிட்டிருப்பதாகக் கூறி இருந்தாலும், எதிர்காலத்தில் எவ்வா றான விசாரணை, தண்டனை வழங்கப் படும் என்பதை தமிழ் பேசும் மக்கள் சுலபமாக அறிந்து கொள்ள முடியும்.

கண்துடைப்பான விசாரணைகள் காலம் காலமாக தமிழ் ஊடகவியலாளர் கள் கொலை செய்யப்படும் போது இடம் பெற்றதையே நாம் கண்ணுற்றோம்.

அச்சுறுத்தல் மத்தியில் நேர்மை யுடனும், துணிச்சலுடனும், உண்மை யான செய்திகளை வழங்கும் அனைத்து தமிழ் ஊடகவியலாளர்களையும் பாது காக்க முடியாத நிலையில்தான் அரசு செயற்படுகின்றது.

இந்தக் கொடூரக்கொலைச் சம்பவ மானது சர்வதேசத்துக்கு தமிழ் ஊடகவி யலாளர்களின் நிலையை மீண்டும் நிரூ பித்துக்காட்டியுள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சர்வதேச பிரசாரத்துக்கு புதிய ஊடகக் குழு !

கொழும்பு —

அரசதரப்புக் கருத்துக்களை வெளிநாடுகளுக்குத் தெரிவிப்பதற்கான சிறப்பு ஊடகக் குழு ஒன்றை அமைக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.


வெளிநாட்டு ஊடகங்கள் வெளியிடுகின்ற செய்திகளால் பாதிப்பு ஏற்படுவதாகவும், அதைத் தடுக்கும் வகையில் இந்தப் புதிய ஊடகக்குழு அமைக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வடக்கு - கிழக்குத் தொடர்பாக இந்தக் குழு வெளியிடும் செய்திகளே அரசாங்கத்தின் உத்தியேக பூர்வ செய்தி என்றும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் மற்றும் ஊடகத்துறை அமைச்சுடன் இணைந்து இந்தப் புதிய ஊடகக் குழு உருவாக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவத்தினர், பொலிஸாரை விலைக்கு வாங்கிவிட்டனர் புலிகள்!

## என்கிறார் கொட்டகதெனிய



கொழும்பு —

இராணுவம் மற்றும் பொலிஸ்துறையிலுள்ள பல ரையும் தமிழீழ விடுதலைப் புலிகள் விலைக்கு வாங்கி விட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் எச்.எம். ஜி.பி. கொட்டக தெனிய கூறியுள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊட கம் ஒன்றுக்கு அவர் அளித் துள்ள நேர்காணலில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அவிசாவளையில் ஐந்து தமிழர்களின் தலை துண்டிக்கப்பட்ட தாகக் கூறுகிறீர்கள். பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த பலரும் தான் பொலிஸாருடனான மோதலில் கொல்லப்படுகின்றனர். தடய அறிவியல் சோதனை முடிவுகள் எதுவும் வெளிவராத நிலையில் அந்த உடல்கள் தமிழர்களினதுதான் என்று எப்படி முடிவு க்கு வர முடியும்?

அரச படைகள் மிகுந்த ஒழுக்கத்தோடு இயங்குகின்றன. விடு தலைப் புலிகளால் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட போதும் அரச படைகள் பொறுமை காக்கின்றன. ஆனால், போர்ச் சூழலில் எமது தற்காப்புக்கான தாக்குதல்களை நாம் நடத்த வேண்டியுள்ளது. இங்கிலாந்து போன்ற நாடுகளில் குண்டு வெடிப்பு நடந்த போது எந்தவித உத்தரவுக்கும் காத்திருக் காமல் சந்தேக நபர்களைச் சுட்டுக் கொன்றார்கள்.

இந்த நாட்டில் உள்ள அரச சார்பற்ற நிறுவன முகவர்கள், ஊடகங்கள் ஆகியவை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற் பட்டு நாட்டைப் பிளவுபடுத்துகின்றனர். இந்த நாட்டினது இறை யாண்மையைப் பாதுகாக்க வேண்டியது அரச படைகளின் கடமை. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினால் பயங்கரவாத அமைப் பின் நிழல் அரசாங்கத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத இயக்கத்தை சர்வதேச சமூகம் ஆதரிக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடை நீக்கப்பட்டிருப்பதால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுப் பதில் சிக்கல்கள் உள்ளன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவும், யுத்த நிறுத்த ஒப்பந்தமானது சில சிறப்பு அனுமதிகளைக் கோருகிறது. எந்த ஒரு நாடும் பயங்கரவாதி களைக் கையாள சிறப்புச் சட்டங்களின்றி செயற்பட முடியாது. சாதாரண சட்டங்களினூடே பயங்கரவாதத்தைக் கையாள முடியாது.

இராணுவத் தளபதி மீது தாக்குதல் நடத்திய தற்கொலைதாரி கொழும்பில் பல மாதங்களாக தங்கியுள்ளார். ஆனால், நாங்கள் தங்கும் விடுதிகளில் சோதனை நடத்தினால் தமிழர்களின் உரிமையை மறுப்பதாக தமிழ் அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

ஜெனிவாவில் ஒரு மாதத்துக்கு முன்பாக அரச படைகள் மீது எந்தவித தாக்குதலையும் மேற்கொள்ள மாட்டோம் என்று விடுதலைப் புலிகள் ஒப்புக் கொண்டிருந்த நிலையில் இராணுவ தளபதி மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். நாங்கள் பயங்கரவாத இயக்கத்தைக் கையாள எமக்கு மேலதிக அதிகாரங்கள் தேவை. அரசாங்கத்தின் எதிரிகளால் முன்வைக்கப்படுகிற விமர் சனங்களை மக்கள் நிராகரிப்பார்கள்.

எந்த ஒரு நாட்டிலும் அதனது உள்விடயங்களில் சர்வதேச முகவர்கள் தலையிட்டது இல்லை. இராணுவத் தளபதி மீது தாக்குதல் நடத்திய பின்னரும் அந்நியத் தலையீடுகள் எமது நாட் டில் நிகழ்கிறது.

கொழும்பு நகரின் பாதுகாப்பு எப்போதும் பலப்படுத்தப்பட்டது தான். ஆனால், தற்கொலைதாரி நீண்டகாலமாக கொழும்பில் இருந்துள்ளார். இத்தகைய நபர்கள் பதுங்கியிருந்து - கிளிநொச் சியிலிருந்து தாக்குதலுக்கான உத்தரவு வரும் வரை காத்திருப் பதைத் தடுக்க பொலிஸாருக்கு சிறப்பு அதிகாரங்கள் தேவை. பொலிஸார் ஒவ்வொருமுறை நடவடிக்கை எடுக்கும் போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூச்சலிடுகின்றனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பின்னர் கொழும்பின் அனை த்துப் பகுதிகளிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஊடுருவியுள் ளனர்: விடுதலைப் புலிகள் பலமாக ஊடுருவியிருப்பதாக அனை வரும் உணருகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதி ராக எந்த ஒரு தமிழரும் வாயைத் திறந்து தகவல் கொடுப்பது இல்லை. கொழும்பில் உள்ள அதிகாரமிக்க சக்திகளால் விடு தலைப் புலிகள் பாதுகாக்கப்படுகின்றனர் என்பது அவர்களுக்குத் தெரியும். பொலிஸிலும், இராணுவத்திலும் நிறையப் பேரை விடுதலைப் புலிகள் விலைக்கு வாங்கியுள்ளனர். இராணுவத் தளபதி மீதான தாக்குதல் என்பது இராணுவத்தில் உள்ளேயுள்ள சிலரது ஒத்துழைப்புடனேயே நடந்தது என்பதை உறுதியாக நான் கூறுவேன்.

இராணுவத்தினர் புலனாய்வுத்துறையில் பலரையும் படுகொலை செய்து சீர்குலைத்துவிட்டனர். இத்தகைய படுகொலைகளுக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தும் போது பாதுகாப்பு அமைச்சர் சொல்கிறார் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பின்னர் புலனாய்வுத் துறை அதிகாரிகளின் பணி அதிகம் தேவையில்லை. அவர்களைப் பாதுகாக்க வேண்டியதற்கான காரணமும் இல்லை என்கிறார். நாட்டில் இப்போது யுத்தம் இல்லை. ஆகையால் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்க மறுத்து விட்டனர்.

இதற்காக அரசாங்கத்தை மட்டும் குறை கூறுவது என்பது அல்ல. இராணுவத் தளபதிகளும் கூட தேவையான நேரத்தில் செயற்பட்டிருக்க வேண்டும். இராணுவத்தில் உள்ளபல மூத்த அதிகாரிகள் சுதந்திரத்தோடு தங்களது விருப்பப்படி செயற்பட்டு வருகின்றனர். நாட்டில் மீண்டும் ஒரு போர் ஏற்படாது என்று கூறிவருகின்றனர். இராணுவ அதிகாரிகளை அரசாங்கத்தின் போதனை வகுப்புகளுக்கு அனுப்புகின்றனர்.

நாம் ஒரு சட்டபூர்வமான அரசாங்கம். நாம் அடிப்படை உரிமைகளை மீறிச் செயற்பட முடியாது. மனித உரிமைகளை மதித்துச் செயற்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகளை சர்வ தேச சமூகம் வலியுறுத்த வேண்டும். ஆனால், அப்படிச் செய்திருக் கிறார்களா?

எந்த ஒரு அமைதிப் பேச்சுக்களாக இருந்தாலும் ஆயுதக் குழு வினர் நடுநிலை சக்திகளின் முன்பாக ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். பேச்சுக்கள் தோல்வியடைந்தால் ஆயுதங்களை திரு ப்பி ஒப்படைக்கப்படும்.

ஆனால், எமது எதிரி சொந்த இராணுவத்தை, கடற்படையை மற்றும் விமானப் படையை வைத்துக் கொண்டு இருக்கும் நிலை யில் நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் ஆயுதங் களை வைத்திருக்கும் போது பேச்சுவார்த்தை நடத்துவது என் பது முட்டாள்தனமானது.

இராணுவத்தின் மீதான அனைத்துத் தாக்குதல்களுக்கும் மக் களே காரணம் என்று பிரபாகரன் கூறுகிறார். ஆனால், பயங்கர வாதிகள் குறித்து நாங்கள் சொல்ல முடியாதா? விடுதலைப் புலி களா அல்லது வேறு நபர்கள் கொலை செய்கிறார்களா என்பது தெரியாது. ஆனால், அரசாங்கத்தை பொறுமையாக இருக்குமாறு போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் கூறினால், மக்கள் தங் களது பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை அவர்களே மேற் கொள்வார்கள் என்றார் கொட்டகதெனிய.

# முல்லைத்தீவு மகாவித்தியாலயம் மீள் புனரமைப்பு செய்வதில் தாமதம்

வட்டக்கச்சி

சுனாமியால் முற்றாக அழிந்த முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தை மீளப் புனரமைப்பதற் கான பொறுப்பை ஜீ.ரி.இசற் நிறுவனத்தினர் ஏற்றிருந்தும் இதுவரையில் அதற்கான வேலைகளை ஆரம்பிக்காது இழுத்தடித்து வருகின்றனர்.

இதனால் இதுவரையில் 600 மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களைத் தொடர்பு கொண்டு கேட்டபோது - விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் நடைபெறவிருந்த ஜெனிவா பேச்சு முடிந்த பின்பே பாடசாலைக்கட்ட வேலையை ஆரம்பிப்பதாகத் தெரிவித்தனர்.

இந்தப் பாடசாலையானது இராணுவத்தினரால் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு பின்னர் நிகொட் நிறுவனத்தாலும், அரச அதிபர் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஆகியவற்றின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டது. ஆனால், சுனாமியால் மீளவும் அழிவுற்றது.

மீளப்புனரமைப்பின் காலதாமதத்தால் சுமார் 600 மாணவர்களின் கல்வி, ஏனைய செயற்பாடுகள் கேள்விக்குறியாக இருப்பதாக பெற்றோர்கள் விசனம் தெரிவித்தனர். (09)



# குடும்பஸ்தர் கொலை சந்தேகத்தில் நால்வர் கைது

மன்னார்

மன்னார் வங்காலையில் ஐவர் கொண்ட குழுவினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 30 ஆம் திகதி இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாகவே 2 பெண்கள் உட்பட நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று முன்தினம் காலை மன்னார் நீதிமன்றில் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிவான் என்.எம்.எம். அப்துல் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (மோ)

# குப்பை கூழங்களை அகற்றி சுகாதாரம் பேண கோரிக்கை

பூநகரி

பூநகரிப் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் சுகாதாரம் பேணுமாறு சுகாதார சேவையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு அருகிலும் சுற்றுப்புற பகுதிகளிலும் குப்பை கூழங்கள் பெருமளவில் தேங்கிக் காணப்படுவதால் பெரும் சுகாதார சீர்கேடு நிலவிவருகிறது.

இதனையடுத்தே சுகாதார சேவையினரால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தத்தமது வர்த்தக நிலையங்களுக்கு அருகிலுள்ள குப்பை கூழங்களை அகற்றி சுகாதாரம் பேணுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.


அகற்ற தவறும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பூ)

# வட்டக்கச்சி மகாவித்தியாலய க.பொ.த. சாதாரண பெறுபேறு

வட்டக்கச்சி

அண்மையில் வெளியான க.பொ.த சாதாரணப் பரீட்சையில் கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறு :-

முருகவேள் வளசிகா - 8A,2B,
வீ.பிரணவி - 6A, 2B, 2C,
பூ.சுகிர்தன் 4A, 4c, 2S,
சி.சியாமளா - 3A, 3B, 4C,
ம.யசோதா - 3A,1B,4C,2S,
க.நளாயினி - 2A, 2B, 2C,3S.
(09)



கிளிநொச்சி - தருமபுரம் மகாவித்தியாலயத்தில் விளையாட்டு மைதான திறப்பு விழா நிகழ்வில் சாரணர்களுக்கான பொறுப்பாசிரியர் இரவிந்திரராசாவுக்கு பிரதம விருந்தினர் சி.கணேசலிங்கம் வெற்றிக் கேடயத்தை வழங்குவதையும், இந்த நிகழ்வில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் விநோத உடை நிகழ்வில் மருத்துவ தாதியாக வந்த மாண விக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இடம்பெயர்ந்தோர் நலனுக்கு செயலணிக்குழு அமைப்பு

கிளிநொச்சி

பிறமாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருவோரின் தொகை நாளாந்தம் அதிகரித்துள்ளதால், இவர்களது தங்குமிடம் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இந்த மக்களின் நலன்களை கவனிக்கவென உயர் அதிகாரிகளை உள்ளடக்கிய செயலணிக் குழுவென்றை நியமித்து - பளை, பூநகரி, கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலங்கள் ஊடாகவும் இடம் பெயர்ந்தவர்களின் நலன்களைப் பேணவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை வன்னிக்கு இடம் பெயர்ந்தவர்களுக்கு சமைத்த உணவுகளையும் ஏனைய உதவிகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் இந்து உலா சஞ்சிகை வெளியீடு

கிளிநொச்சி

கிளிநொச்சி இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தினரின் இந்து உலா சஞ்சிகை வெளியீடு கடந்த 25 ஆம் திகதி காலை 10 மணிக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வன். சி.சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - வெளியீட்டு உரையை தமிழீழ வைப்பக ஆளுகை மேளாளர் க.பாலகிருஸ்னன் நிகழ்த்தியதுடன் இந்து உலா சஞ்சிகையை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை இலங்கை வங்கி கிளிநொச்சிக் கிளை நிர்வாக அதிகாரி சிறிதரன் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. அடுத்து கல்லூரியில் கல்வி பயின்று பல்கலைக் கழகத்துக்கு தெரிவான மாணவ, மாணவிகளுக்குச் சிறப்புப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

சஞ்சிகையின் மதிப்பீட்டுரையை கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் க.முருகவேல், ஆ.அமிர்தலிங்கம், ஆசிரிய ஆலோசகர் தி.வரதன் ஆகியோர் நிகழ்த்தினர். (09)

# கண்டாவளைப் பிரதேசத்தில் காட்டு யானைகள் தொல்லை

கண்டாவளை

கண்டாவளை பிரதேசத்தில் காட்டுயானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதால் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தப் பகுதிக்குள் நுழையும் காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்துவதுடன் பயன்தரு மரங்களையும் முறித்து வருகின்றன.

அண்மையில் கல்மடு நகரில் பருத்தித் தோட்டம் ஒன்றினுள் நுழைந்த காட்டு யானைகள் அங்கிருந்த பல தென்னை மரங்களை முறித்து வீழ்த்தியுள்ளன. இதன் காரணமாக இந்தப்பிரதேசத்தில் உள்ள தென்னை செய்கையாளர்கள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர். அத்துடன் தமக்கு நஷ்டஈடு வழங்கப் படவேண்டுமென கண்டாவளை பிரதேச செயலகத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதையடுத்து பாதிக்கப்பட்ட தென்னை செய்கையாளர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கண்டாவளை பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

# விலங்கு, பறவை பண்ணைகளை பதிவு செய்ய கோரிக்கை

கிளிநொச்சி

தாயகப் பகுதிக்குட்பட்ட பகுதிகளில் மாடு, ஆடு , கோழி, வாத்து, முயல், பன்றி விலங்குப் பண்ணைகளும், பறவைப் பண்ணைகளும் வைத்திருப்போர் தொடர்ச்சியான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்கும் விலங்கு, பறவைகளால் பரவும் நோய்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டும் தமிழீழ சுகாதார சேவைகளால் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனடிப்படையில் விலங்கு, பறவைப் பண்ணைகளின் பதிவுகளை உடனடியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு (புதுக்குடியிருப்பு), மன்னார் (கறுக்காய்க்குளம்), வவுனியா (புளியங்குளம்), யாழ்ப்பாணம் (பளை) திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள தமிழீழ சுகாதார சேவைகளின் மாவட்டப் பணிமனைகளில் உடனடியாக விண்ணப்பங்களை பெற்று பதிவை மேற்கொண்டு விசேட சுகாதார செயற்பாட்டுக்கு ஒத்துழைத்துதவுமாறு தமிழீழ சுகாதார சேவை கேட்டுக் கொண்டுள்ளது.

# நீச்சல் தடாகம் தாளையடியில் திறப்பு

வடமராட்சி

சுவிமிங் லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால் தாளையடியில் முதன் முதலாக நீச்சல் தடாகமொன்று அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம் பெற்ற இந்தத் திறப்புவிழா நிகழ்வு நீச்சல் பயிற்சி ஆசிரியர் றொசாரோ தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை வடமராட்சி கிழக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவன இணைப்பாளர் ரங்கன் , தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் றொபின்சன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றி வைத்தார்.

நீச்சல் தடாகத்தை சுவிமிங் லங்கா வடக்கு - கிழக்கு இணைப்பாளர் தபேசன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

# பெண்களுக்கான பயிற்சி மையம் புளியங்குளத்தில் திறப்பு

புளியங்குளம்

போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியா வடக்கு பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால், பெண்களுக்கான சுருக்கெழுத்து, தட்டச்சு பயிற்சிமையம் அண்மையில் புளியங்குளத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனப் பணிப்பாளர் பத்மாவதி இரவிகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆரம்ப விழா வைபவத்தில் பொதுச்சுடரை புளியங்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இந்திரன் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் த.ஆவர்த்தனா ஏற்றி வைத்தார்.

நிறுவனத்தின் கொடியை நிறுவன நிர்வாக உத்தியோகத்தர் வி.நகுலேஸ்வரி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து உரைகளை போராளி ஆவர்த்தனா, புளியங்குளம் அரசியல்துறை பொறுப்பாளர் இந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

# சரத் பொன்சேகாவின் உடல்நிலை இப்போது எப்படி இருக்கிறது?

கடந்த 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி இலங்கையின் 18 ஆவது இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றார் லெப்ரினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா. பதவியேற்ற கையோடு ஆங்கிலச் செய்தித்தாளான சண்டே ஒப்சேவருக்குச் செவ்வி ஒன்றினை வழங்கியிருந்தார்.

"விடுதலைப் புலிகளை எப்படிக் கணிக்கிறீர்கள்?" என்ற கேள்விக்கு "விடுதலைப் புலிகள் ஒரு முறியடிக்கப்படக்கூடிய இராணுவம். புள்ளிவிபரப்படி பார்த்தால் அவர்களில் 7000 - 8000 பேர்தான் தேறுவார்கள். அதிலும் பாதிப்பேர் 1 லட்சத்து 20 ஆயிரம் பேரைக்கொண்ட இலங்கை இராணுவத்துடன் ஒப்பிடும்போது போர் அனுபவம் அற்றவர்கள்" எனவும்,

"அப்படியாயின் இன்றுவரை ஏன் இராணுவத்தால் புலிகளை அழிக்க முடியவில்லை?" என்ற கேள்விக்குச் சில இராணுவ அதிகாரிகள் தங்களது கடமைகளைச் சரிவரச் செய்யாமைதான் இதுவரை விடுதலைப் புலிகளை வெல்லமுடியாமைக்குக் காரணம்" என்றும் பதிலளித்திருந்தார்.

கடமையைச் சரிவரச் செய்யும் தளபதியாகத் தானிருக்கும் போது, தனது நம்பிக்கைக்குரிய கடமை தவறா வீரர்கள் தன்னைச் சூழ நியமிக்கப்பட்ட பின்பு, தனது தலைமையகத்திலே நடந்த ஒரு குண்டுவெடிப்புக்குப் புலிகளே காரணமாகத் தமது இராணுவப் பேச்சாளர் சொல்லிக்கொண்டிருப்பதைப் பொன்சேகா அறிவாரேயானால் அந்த அதிர்ச்சியே அவரது உயிரை வாங்கிவிடும்.

சரத் பொன்சேகா யாழ்.மாவட்டக் கட்டளை அதிகாரியாக இருந்த வேளையில்தான் ரணில் அரசுடன் விடுதலைப் புலிகள் பறந்து பறந்து பேச்சு நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அந்த வேளையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் சொன்னபடி உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றுவது குறித்துப் புலிகள் வலியுறுத்தியபோது, அவ்வாறு விலக்குவது இராணுவத்தின் பாதுகாப்புக்கு ஆபத்து என்று கூறி மறுத்து பேச்சுக்கள் முறிந்துபோக அத்திவாரமிட்டார் பொன்சேகா.

இறுதியில் அந்தப் பாதுகாப்பு வலயங்களுக்கெல்லாம் தாய் வலயமான இராணுவத் தலைமையகத்திலே தனது சொந்தப் பாதுகாப்பைக் கூட அவரால் உறுதிசெய்ய முடியாமல் போனது விந்தையானதே.

சரி இனி விடயத்துக்கு வருவோம். இலங்கையிலிருந்து வெளிவரும் சில பத்திரிகைகள் அவர் இன்னமும் செயற்கைச் சுவாசக் கருவியின் உதவியோடு சுவாசிப்பதாக எழுத, வேறு சில பத்திரிகைகள் அவர் சில சொற்களைக் கதைத்தார். குண்டு வெடித்ததை நினைவு கூர்ந்தார் என்று கதை விடுகின்றன.

இன்னும் எந்தப் பத்திரிகையும் 'அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்தபடி இராணுவத்துக்கு உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்' என்று எழுதாமல் இருப்பது தான் அதிசயம்!

சிங்களத்தின் சாதாரண படை வீரனுக்கு ஆதர்ஷ புருஷனாகவும், சிங்கள தேசத்தின் யுத்தப் பிரபுவாகவும் திகழ்ந்த சரத் பொன்சேகாவின் இன்றைய நிலை என்ன? அவரது எதிர்காலம் என்ன? இது இலங்கையில் இருப்பவர்களது மனத்திலே - ஏன் உலகம் முழுவதிலும் இருந்து இலங்கையில் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும் அனைவரது மனதிலும் எழும் கேள்வி.

இன்றைய நிலவரப்படி இராணுவத்தளபதி இன்னமும் உயிருக்குப் போராடியபடி செயற்கைச்சுவாச இயந்திரத்தின் உதவியுடன் தான் மூச்சை விட்டுக்கொண்டிருக்கிறார்.

"எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்" என்ற அபிப்பிராயம் தான் மருத்துவ வட்டாரத்தில் நிலவுகிறது.

இந்த நிலையில் பொன்சேகா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கணத்தில் இருந்து அவரது நிலை குறித்துச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது குண்டுவெடிப்பில் படுகாயமடைந்த பொன்சேகாவின் உடலிலே குண்டுச் சிதறல்கள் சல்லடையிட்டிருந்தன.

அதனால் அவரது உடலை உடனடியாக எக்ஸ் கதிர் ( X - Ray ) மூலமும், கணினிக் குறுக்குவெட்டு முறை ( CT SCAN) மூலமும் படம்பிடித்து எங்கெங்கே சிதறுதுண்டுகள் தைத்திருக்கின்றன என்பதைக் கண்டறிந்த மருத்துவர்கள் அவற்றை அகற்றும் சத்திரசிகிச்சையைத் தொடங்கினார்கள்.

அது ஒரு மிகச் சிக்கலான சத்திரசிகிச்சை. பொன்சேகாவின் உடலில் பிரதானமாக இடது வயிற்றுப்புறமும், இடது மார்புப் புறமும் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தன.

இடது சிறுநீரகம் ( Left kidney) சதையியின் உடல் மற்றும் வால் பகுதி ( Body and Tail of the pancreas ), இறங்கு பெருங்குடல் ( Desending colon ) மற்றும் இடது நுரையீரலின் கீழ்ப்பகுதி (Left lower lobe of the Lung) ஆகியவற்றில் தான் அனேக குண்டுச் சிதறல்கள் புதைந்துகிடந்தன.

குண்டுச் சிதறலினால் உடம்பில் ஏற்பட்ட சல்லடைக் கண்களூடாக இரத்தம் கசிந்தபடி இருக்க மறுபுறத்தே நாளங்கள் ஊடாக இரத்தம் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தது.

இந்த நிலையில் வயிற்றறைக் குழியும் (Thoracice Cavity ) நெஞ்சுக்குழியும் ( Abdominal Cavity ) வெட்டித் திறக்கப்பட்டு குண்டுச் சிதறல்கள் அகற்றப்படவும், அளவுக்கு மீறிச் சிதைந்த உள் உடல்பாகங்கள் அகற்றப்படவும் வேண்டும். அத்தோடு, வயிற்றறைக் குழி மற்றும் நெஞ்சறைக் குழியினுள் நிறைந்திருக்கும் குருதியையும், பிற உடற்திரவங்களையும் ( Body fluids ) அகற்றவேண்டும்.

இதன்போது மேலும் குருதி இழப்பு ஏற்படும்.

அதீத குருதி இழப்புக் காரணமாக நோயாளியின் இதயம், மூளை போன்ற பிரதான அங்கங்கள் செயலிழக்கும் அபாயம் மிக அதிகம். இதனைத் தவிர்ப்பதற்கு மிக அதிகளவில் குருதி ஏற்றப்பட வேண்டும். இதனால் வேறு பல பாதிப்புகள் ஏற்படும்.

இத்தனை ஆபத்துகளுக்கும் மத்தியில்தான் மருத்துவர் குழு தமது பணியை ஆரம்பித்தது.

சத்திரசிகிச்சையின் ஒரு கட்டத்திலே பொன்சேகாவின் இதயம் செயலிழக்கத் தொடங்கியது. உடனடியாக அதைத் தடுப்பதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வைத்தியர்கள் தமது சத்திரசிகிச்சையைத் தொடர்ந்தார்கள்.

இடது சிறுநீரகம் படுமோசமாகச் சிதைந்துபோயிருந்தது. சதையியின் வால் மற்றும் உடற்பகுதியும் மறுசீரமைக்க முடியாதளவு சேதமடைந்து காணப்பட்டன. எனவே அவை அகற்றப்பட்டன.

குடல் மற்றும் நுரையீரலில் ஏற்பட்ட சேதமும் மறுசீரமைக்கப்பட்டது. ஒருவாறு ஏறத்தாழ நான்கு மணிநேரப் போராட்டத்தின் பின் இயலுமான வரைக்கும் கிழிந்த சேலையைத் தைத்துப் போடுவது போலச் சிதைந்த உடற்பாகங்கள் சீரமைக்கப்பட்டன.

இன்னும் சில குண்டுச் சிதறல்கள் ஆங்காங்கே புதைந்திருப்பினும், தற்போதைக்கு இவ்வளவும் போதும். நோயாளி சற்றுக் குணமடைந்தால் மீண்டும் ஒரு தடவை சத்திரசிகிச்சைக்குட்படுத்தி அவற்றை அகற்றலாம் என்று மருத்துவர்கள் முடிவுசெய்தார்கள்.


செயற்கைச் சுவாசக் கருவியில் இணைக்கப்பட்ட இராணுவத்தளபதி அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் வைக்கப்பட்டுப் பராமரிக்கப்படலானார்.

செயற்கைச் சுவாசக் கருவியானது தொண்டையினூடு செலுத்தப்படும் ஒரு குழாய் மூலம் வழியை நோயாளியின் நுரையீரலுக்குச் செலுத்தும்.

எனவே, செயற்கைச் சுவாசக் கருவியின் உதவியால் சுவாசிக்கும் ஒருவர் கதைத்தார் என்பது வெறும் கட்டுக்கதையாகத்தான் இருக்கமுடியும்.

### அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இராணுவத்தளபதி

வைத்தியசாலைகளிலுள்ள அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளிலே சாதாரண அபாய கட்டத்தைத் தாண்டிய நோயாளிகள் பராமரிக்கப்படுவதில்லை.



மேற்படி பிரிவுகளில் 24 மணிநேரமும் நோயாளியின் இதயத்துடிப்பு, இரத்தஅழுத்தம், குருதியில் ஒட்சிசனின் அளவு, சுவாச வீதம் என்பன கண்காணிக்கப்படும். 24 மணிநேரமும் ஆறு மணிநேரத்துக்கு ஒரு வைத்தியர் என்ற முறையில் தொடர்ச்சியாக வைத்தியர்களால் நோயாளி கண்காணிக்கப்படுவார்.

இந்தப் பிரிவுகளில் உள்வாங்கிப் பராமரிக்கப்படும் நோயாளிகளின் உடல்நிலை எந்த நேரமும் மோசமடையலாம் அல்லது நோயாளி இன்னமும் அபாய கட்டத்தைத் தாண்டவில்லை என்பது தான் இந்தத் தீவிர கண்காணிப்புக்குக் காரணம்.

இது இப்படியிருக்க, சிங்கள பத்திரிகையாளர்களோ தமது இராணுவத் தளபதி அபாயகட்டத்தைத் தாண்டிவிட்டதாக எழுதுகிறார்கள். இதைவிடப் பொய்யுரை உலகில் வேறு கிடையாது.

அறுவைச் சிகிச்சையுடன் முதலாவது கண்டத்தைத் தாண்டிய பொன்சேகா இன்னும் பல கண்டங்களைத் தாண்டவேண்டியுள்ளது. அவை எவை என்பதை இனி நோக்குவோம்.

தொடர் குருதி இழப்பினாலும் (continues bleeding)அதிக குருதி மாற்றீட்டாலும் (Massive Blood Transfusion) வரும் ஆபத்துக்கள்.

1. சரத் பொன்சேகாவினது உடலிலிருந்து குருதிக் கசிவு இன்னமும் முற்றாக நின்றுவிடவில்லை. இப்படி நீண்ட நாட்களுக்குத் தொடர் குருதிக் கசிவு ஏற்படுவதானது குருதிக் கலங்களினுள்ளே குருதி உறையும் பாரதூரமான நிலையை ஏற்படுத்திவிடும். இந்த நிலை ஏற்பட்டால் அனேகமாக மரணம் நிச்சயம்.

2. அடுத்து, தொடர்ந்து செலுத்தப்படும் குருதியானது உடலிலே பல வேண்டத்தகாத விளைவுகளை ஏற்படுத்திவிடும். அவற்றுள் பிராதானமாக -

திருமகள்

அ.இரத்த வங்கிகளில் சேமிக்கப்பட்ட குருதியிலே பொட்டாசியம் சாதாரண அளவை விட அதிகமாகவே காணப்படும். அதிக பொட்டாசியம் இதயத்தின் சந்தத்துடிப்பைக் குழப்பியடித்து, இதயத்தைச் செயலிழக்கச் செய்துவிடும்.

ஆ. தொடர்ந்து செலுத்தப்படும் குருதியின் ஊடாகச் செல்லும் இரும்புச் சத்தானது உடலில் தேங்கிவிடும். அளவுக்கு மீறித் தேங்கும் இரும்பு கல்லீரல், இதயம் முதலிய உறுப்புகளில் படிந்து அவற்றின் செயற்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும். இதனால் அவை செயலிழக்கலாம். காயங்களிலிருந்து உடலினுள் கசியும் திரவங்களால் வரும் ஆபத்து.

1. சதையியிலே சுரக்கப்படுகின்ற நொதியங்கள் தான் நாம் உள்கொள்ளும் புரதத்தைச் சமிபாடு அடையச் செய்கின்றன. இராணுவத்தளபதியின் சதையி சிதைந்து போயிருப்பதால் அதிலிருந்து வயிற்றறைக் குழிக்குள் நொதியங்கள் கசிந்து, அங்குள்ள தசைகளிலுள்ள புரதத்தை அழிக்கத் தொடங்கினால் அவ்வளவுதான். சில மணிநேரத்தினுள் வயிற்றறைக் குழியினுள் நிகழும் தீவிர அழற்சியால் நோயாளியின் உயிருக்கு ஆபத்து நேரிடும்.

2. மனிதரது குடலிலே நுண்ணுயிர்கள் எப்போதும் வசித்துவருகின்றன. இவற்றில் அனேகமானவை குடலினுள்ளே இருக்கும் போது எமக்கு எந்தத் தீங்கையும் செய்வதில்லை. ஆனால், குடலில் ஒரு துவாரம் விழுந்து அதன் வழியாக இவை வயிற்றறைக் குழிக்குள் போய்விட்டால் உடனடியாகப் பல்கிப் பெருகித் தொற்றை உருவாக்கிவிடும். நிலைமை இப்படியிருக்கப் பொன்சேகாவின் குடலிலோ பல துவாரங்கள். அவை அடைக்கப்பட்டுவிட்டாலும் அவற்றினூடே கசிவு நேர்ந்தால் ஆபத்துத்தான்.

### நீண்ட நாட்கள் படுக்கையிலிருப்பதால் வரக்கூடிய ஆபத்துக்கள்.

இப்போதுள்ள நிலை நீடித்தால், சரத்பொன்சேகா இன்னமும் குறைந்தபட்சம் ஒரு மாதம் கட்டிலிலே படுத்தபடிதான் கழிக்கவேண்டும்.

1. நீண்டகாலம் படுத்தபடுக்கையாக இருக்கும் ஒருவருக்கு தொடைப்பகுதியிலுள்ள நாளங்களிலே குருதி உறைவதால் குருதிக்கட்டி ( Blood clot) உருவாகும் வாய்ப்புகள் அதிகம். இந்தக் குருதிக் கட்டியானது இரத்த ஓட்டத்துடன் சென்று நுரையீரல் நாடியை அடைத்தால் சடுதியாக நோயாளி மரணிக்க நேரிடும். காப்பாற்றுவதற்கான சந்தர்ப்பமே கிடைக்காது.

2. படுத்த படுக்கையாகக் கிடக்கும் ஒருவருக்கு நுரையீரல் பகுதியிலே அழற்சி ஏற்பட வாய்ப்புகள் அதிகம். இதுவும் ஒரு உயிராபத்தைத் தோற்றுவிக்கக்கூடிய நிலைதான்.

பல முக்கிய அங்கங்கள் ஒரே தடவையில் பாதிக்கப்படுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள்-

சிறுநீரகம், சதையி, நுரையீரல் என முக்கிய அங்கங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் ஒரே தடவையில் பல அங்கங்கள் செயலிழக்கும் அபாயம் உண்டு. இது நடந்தால் இராணுவத்தளபதி தப்பிப் பிழைப்பது அபூர்வம்.

இவ்வளவு அபாயங்களையும் தாண்டி இராணுவத்தளபதி பிழைத்தாலும் (அப்படித் தப்பிப்பிழைப்பதற்கான சந்தர்ப்பம் அரிது) ஆறு மாதத்திலிருந்து ஒரு வருடம் வரையில் அவர் ஓய்வெடுக்க நேரிடும். அதன் பின்பு கூட உடல் ரீதியாக அவரால் முன்னரைப் போலச் செயற்படுவதென்பது முயற்கொம்பு.

மேலும், சதையியின் கணிசமான பகுதி பாதிக்கப்பட்டிருப்பதால் வாழ்நாள் முழுவதும் இன்சுலின் ஊசியுடன் வாழவேண்டிய நிலையும் பொன்சேகாவுக்கு நேரலாம். காரணம் சதையியிலே தான் இன்சுலினைச் சுரக்கும் லஞ்சகன் சிறுதீவுகள் எனப்படும் சுரப்பிகள் உள்ளன.

இந்த வகையில் குண்டை வெடிக்க வைத்தவர்கள் தங்களது நோக்கத்தை அனேகமாக நிறைவேற்றிக் கொண்டார்கள் என்று தான் கருதமுடியும்.

நன்றி - இணையத்தளம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தொழில்நுட்பக் கல்லூரியை காலவரையறையின்றி மூட முடிவு!

யாழ்ப்பாணம்—

மாணவர்கள், உத்தியோகத்தர்களின் உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களையடுத்து காலவரையறையின்றி தொழில்நுட்பக் கல்லூரியை மூடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக கல்லூரிச் சமூகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக உயர் தொழில்நுட்பக் கல்லூரி சமூகம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த மாதம் 26 ஆம் திகதி தொழில்நுட்பக் கல்லூரியின் நிரந்தரக் காவலாளி கடமை நேரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் மாணவர் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

50 மீற்றர் தூரத்தில் இராணுவ முகாம் இருப்பதாலும், கல்லூரிக்கு முன்பாகவுள்ள பாதையில் தினமும் பலமுறை இரா ணுவத்தினர் ரோந்து செல்கின்றனர். ஆகவே அவர்களுக்குத் தெரியாமல் இந்தப் படுகொலைச் சம்பவம் நடந்திருக்க முடியாது. ஆகவே தமது உயி ருக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது என மாணவர் கூட்டத்தில் முறையிட்டதுடன் தமது பாதுகாப்புக்குரிய நடவடிக்கை எடுக்கும் வண்ணம் அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தார்கள்.

பாதுகாப்பு உத்தியோகத்தரும் தமது உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்றும் பாதுகாப்பான சூழல் ஏற்படும் வரை கடமைக்கு வருவதற்குப் பயமாக இருக்கிறது என்றும், பாதுகாப்பான சூழல் ஏற்படும்வரை கல்லூரிக்கு வருவதில்லை எனவும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இந்த விடயம் அதிபர் மூலம் அரச அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும் மாணவர்களும், ஆசிரியர்களும் திரும்பவும் பாடசாலைக்கு வருவதற்கு பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்தித்தரும்படி கல்லூரி அதிபர் அரச அதிபரைக் கேட்டுக் கொண்டதன் காரணமாக அரச அதிபர் இந்த நிலைமையைத்திணைக்களப் பணிப்பாளருக்கும், அமைச்சின் செயலாளருக்கும் அறிவித்துவிட்டு பாதுகாப்பான ஒரு சூழ்நிலை ஏற்படும்வரை கல்லூரியைக் காலவரையறையின்றி மூடுமாறு அரச அதிபர் கல்லூரி அதிபருக்குப் பணித்துள்ளார்.

பாதுகாப்பான ஒரு சூழ்நிலை ஏற்பட்டு கல்லூரியைத் திறக்கும்படி அரச அதிபர் அறிவித்த பின்பு மாணவர் மன்றத்தினருடன் ஆலோசித்து கல்லூரி ஆரம்பிக்கும் திகதி அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை

யாழ்ப்பாணம்—

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பகுதி - I வருட BAd/B.com மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டு மீள் பரீட்சைகள் எதிர் வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளது.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இல - 021 222 3610 என்ற இலக்கத்துடனோ அல்லது பீடாதிபதி அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளலாமென பீடாதிபதி அறிவித்துள்ளார்.

## உதயன் மீதான....

களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என - யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம், தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, யாழ். பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், செ.கஜேந்திரன், மாவை சேனாதிராசா மற்றும் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறு பொது அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

இதேவேளை - உதயன் அலுவலகம் மீதான தாக்குதலைக் கண்டித்து ஊடக ஒன்றிணைப்பு மையம் இன்று கிளிநொச்சியில் கண்டனப் பேரணி நடத்தவுள்ளது. பேரணியின் இறுதியில் ஜனாதிபதி மற்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் ஆகியோருக்கான மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன.

## இன்று...

நிறுத்துவதுடன் அப்பாவி மக்களினதும், ஊடகவியலாளர்கள், மாணவர்கள் மீதான வன்முறைகள் உடன் நிறுத்தப்படவேண்டும் எனக் கோரி நிற்பதுடன் -

இதற்குச் சர்வதேச சமூகமும், சர்வதேச ஊடகங்களும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என வேண்டிக்கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3 இளைஞர்...

பின்னரே சுட்டுக்கொல்லப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் சடலங்கள் மீட்கப்பட்ட இடத்திலிருந்து 9 மி.மீ துப்பாக்கி ரவைகள் 9 மீட்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. (03)

# விடுதலைப் புலிகளை சந்திக்கச் சென்ற கண்காணிப்புக் குழுவினருக்கும் தடை!

மன்னார்—

விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்திப்பதற்குச் சென்ற மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவரை உயிலங்குளம் சோதனைச்சாவடியில் ஒரு மணி நேரம் தடுத்துவைத்த பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

மன்னார் மாவட்டஅரசியல் துறை பொறுப்பாளர் இனியவனைச் சந்திப்பதற்காக மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் நேற்று உயிலங்குளம் இராணுவ சோதனைச் சாவடியூடாகப் பயணம்செய்தார்.

சோதனைச்சாவடியில் காலை 9.30 மணியளவில் அவரை இடைமறித்து படையினர் தடுத்துநிறுத்தினர்.

இராணுவ அதிகாரிகள்- தலைமை யக அதிகாரிகளுடன் தொடர்பை மேற்கொண்டு அங்கிருந்து அனுமதி கிடைத்தபின்னரே தொடர்ந்தும் பயணிக்க அனுமதிக்க முடியும் என்று படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

அதன் பின்னர் 10.30மணிக்கே கண்காணிப்புக் குழு பிரதித் தலைவரைச் செல்ல படையினர் அனுமதித்தனர்.

படையினரின் கெடுபிடி சோதனைகளுக்குப்பின் மன்னார் -கறுக்காய் குளம் அரசியற்துறைச் செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவனை கண்காணிப்புக்குழு பிரதித்தலைவர் சந்தித்தார்.

படையினரின் கெடுபிடி குறித்து பேசிய போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மாவட்டப் பிரதித்தலைவர் தனக்கே இந்த நிலையிருக்கும்போது தமிழ் மக்களுக்கு எந்த வகையிலான கெடுபிடி படையினரால் மேற்கொள்ளப்படும் என்பதை தன்னால் உணர்ந்து கொள்ள முடியும் என்றார்.

## கொன்ஸ்டபிள் படுகாயம்

வவுனியா—

வவுனியா - இறம்பைக்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கொன்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

நேற்று மாலை வவுனியா நகரிலிருந்து கடமைக்காக இறம்பைக்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது இவர் மீது பெண்ணொருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளின்...

இலங்கைக்குச் சென்று இருதரப்பினரையும் சந்தித்துப்பேசி இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே ஜெனிவாப்பேச்சுக்கான திகதியை அறிவிக்கலாம் எனவும் ஹன்சன் பௌயர் மேலும் தெரிவித்தார்.

## சந்தேக நபர்கள்....

யோகநாதன் கிசாந் (வயது20), மோகனதாஸ் அனுசாகரன் (வயது 20) ஆகிய நான்கு மாணவர்களையும், இரட்ணம் சபேசன், செல்வநாயகம் ஜெறாவிலன் ஆகிய இரு வர்த்தகர்களுமே கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் நேற்று அடையாள அணிவகுப்பில் உட்படுத்தியபோதும் - எவரும் அடையாளம் காணப்படாத நிலையில் அவர்களை பிணையில் செல்ல அனுமதித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 4 மாணவர்களும் இந்த மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

இவர்கள் கன்னாதிட்டிப் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் கல்வி கற்பதற்காக அந்தப் பகுதியில் வாடகை வீட்டில் தங்கியிருந்தனர்.

இதேவேளை, சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மாணவர்களுக்கும் இந்தச் சம்பவத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்று பாடசாலை அதிபர்கள் - யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# பயணிகள் பஸ்மீது கிளைமோர்த்தாக்குதல்

வவுனியா—

வன்னியில் ஏ-9 வீதியில் பயணிகள் பஸ்ஸை இலக்குவைத்து படையினர் நேற்று மாலை 4.30மணிக்கு கிளைமோர்த் தாக்குதலை நடத்தினர்.

ஏ-9 வீதியில் பஸ்கள் மற்றும் லொறிகள் பயணம் செய்து கொண்டிருந்த போது பயணிகள் பஸ்ஸை இலக்குவைத்து இந்தக் கிளைமோர் வெடிக்கவைக்கப்பட்டுள்ளது.

சிறிய இடைவெளியில் பஸ் கிளைமோர் தாக்குதலிலிருந்து தப்பியுள்ளது.

ஏ-9 வீதி வவுனியா வடக்கு கனகராயன் குளத்துக்கும்- மாங்குளத்துக்கும் இடைப்பட்ட பெரியகுளம் பகுதியில் கிளைமோர்த்தாக்குதலை இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்தியுள்ளனர்.

## இலங்கை அரசுக்கு எதிராக....

ஒன்றுதிரண்டனர்அங்கிருந்து இலங்கைத் தூதரகம் நோக்கி ஊர்வலமாகப் புறப்பட தயாராகினர்.

ஆனால், ஊர்வலத்துக்கும் ஆர்ப்பாட்டத்துக்கும் பொலிஸார் அனுமதி மறுத்தனர். இதையடுத்து அந்த இடத்துக்கு வந்த உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் வாதிட்டார்.

எங்கள் ஜனநாயக உரிமைகளை மறுப்பது எந்த வகையில் நியாயம் என்று கேள்வி எழுப்பினார். இருப்பினும், பொலிஸார் அனுமதி மறுத்தனர். கைதுசெய்ய நேரிடும் என்றும் எச்சரித்தனர்.

கைதுசெய்யப்பட கூடும் என்று தயாராகவே வந்தோம். கைது செய்யுங்கள் என்று நெடுமாறன் கூற - அங்கிருந்த தமிழின உணர்வாளர்கள் பொலிஸாருக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மார்க்சிய பெரியாரிய பொதுவுடமைக் கட்சியின் செயலாளர் வே.ஆனைமுத்து, பெரியார் திராவிடர் கழக தலைவர் கொளத்தூர் தா.செ.மணி, தமிழ் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு, தமிழ்த் தேசப் பொதுவுடமைக்கட்சியின் செயலாளர் பெ.மணியரசன், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் செயலாளர் பொழிலன், புதுவை பெரியார் திராவிடர்கழகத் தலைவர் லோகு அய்யப்பன், ராஜீவ் வழக்கில் சிறையில் வாடும் பேரறிவாளனின் தாயார் அற்புதம் குயில்தாசன் அம்மையார், தலைநகர் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சுந்தரராசன்,

ஓவியர் வீரசந்தானம், பி.வி.பக்தவக்சலம், முன்னாள் சட்டசபை உறுப்பினர் திருச்சி சௌந்தரராஜன், உலகத் தமிழர் பேரவையின் பத்மநாபன், தமிழ்த்தேசிய மார்க்சிச கட்சியின் இராசேந்திர சோழன், பொடா சாகுல் ஹமீது, புலவர் இறைகுருவனார், மா.செ.தமிழ் மணி, உலகத் தமிழர் மைய நிர்வாகி மதிவாணன், முனைவர் தமிழப்பன், புரட்சிகர இளைஞர் முன்னணி நிர்வாகிகள் உள்ளிட்ட 500 இற்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று கைதாகினர்.

## கண்காணிப்புக்குழு அறிக்கை....

கொடுக்கப்பட்டஅழுத்தம் காரணமாக கண்காணிப்புக்குழு மீது தமிழர்கள் வைத்திருந்த நம்பிக்கையைப் பாதிக்கத்தக்க வகையில் ஊடகங்கள் வேறுபட்ட வியாக்கியானங்களைத் தெரிவிக்க வழியை ஏற்படுத்தும் அறிக்கையை வெளியிடுவதற்கு கண்காணிப்புக்குழு விரும்பியதால் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கவலையடைந்திருக்கிறது என்பதைத் தங்களது கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

நாம் இந்தக் கடிதத்தை தங்களுக்கு வரைந்து கொண்டிருக்கும் சமயத்திலும் வடக்கு - கிழக்கில் மேலும் பல பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்பதைத் தங்களது கவனத்துக்குக் கொண்டுவர நாம் விரும்புகிறோம்.

மக்களால் நன்கு மதிக்கப்படும் யாழ்ப்பாணத்தின் முன்னணித் தமிழ்த் தினசரியான உதயன் பத்திரிகை அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு மூத்த பணியாளர்கள் கொலை செய்யப்பட்டதும் இதில் உள்ளடங்கும்.

அரச பாதுகாப்புப்படைகள் சம்பந்தப்பட்ட பல நீதிக்குப்புறம்பான படுகொலைகள் நடந்த இடங்களுக்குத் தாங்கள் பல முறை (நூறு முறை மேல்) பயணம் செய்த பின்னரேயே ஏப்ரல் 29 அன்று வெளியிடப்பட்ட உங்கள் தீர்ப்பானது வெளிவந்தது என்பதை நாம் அறிவோம்.

பாதிக்கப்பட்டவர்களது குடும்பங்களுடனும் சம்பவங்களை நேரில் பார்த்தவர்களுடனும் உங்களால் உரையாட முடிந்தது.

ஆகவே, தங்களது தீர்ப்புக்களிலும் அறிக்கைகளிலும் தொடர்ந்தும் உண்மையுள்ளவராகத் தாங்கள் இருக்கவேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்ளும் அதேவேளை, தெளிவுபடுத்தல்களுக்கு மாறுபட்ட வியாக்கியானங்களுக்கு இடமளிக்காமல் பார்த்துக்கொள்ளும்படியும் கேட்டுக் கொள்கிறோம். இது உயிர்களைப் பாதுகாக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

என்று அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அருந்தவநேசம் சிறீதரன்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்தவநேசம் சிறீதரன் நேற்று (03-05-2006) காலமாகி விட்டார்.

இவர் திரு ஆறுமுகம் சிறீதரன் (யா/ சிறுவிளான் கனகசபை வித்தியாலய அதிபரும், சமாதான நீதிவானும், அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் பொதுச் செயலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், சி.சஜந்திரன், சி.பவேந்திரன், சி.சுஜந்திரன் (யா/ யூனியன் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (04-05-2006) பி.ப. 2மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*சிவகுரு வீதி,*
*ஏழாலை மேற்கு.*
(2262)
ஆ.சிறீதரன்
கணவர்

## கந்தையா துரைராஜா

*(ஓய்வுபெற்ற தபாலதிபர்)*

மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா துரைராஜா அவர்கள் 03-05-2006 நேற்று புதன் கிழமை காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும், வசந்தன், அருந்ததி, காஞ்சனா, மயூரதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 04-05-2006 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

*ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*திருநெல்வேலி.*
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.